454

454

சேக்கிழார்

இலக்கணமும் கட்டுரையும்

(இரண்டாம் புத்தகம்—நான்காம் வகுப்பு)

(1939-ம் வருடத்தின் பாடத்திட்டப்படி தயாரிக்கப்பட்டது.)

ஆசிரியர்:

வித்வான் மா. இராசமாணிக்கம், B.O.L., L.T.,

தமிழ் ஆசிரியர்,

முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.

20 SEP 1945

MADRAS

813

மாடல் பப்ளிகேஷன்ஸ்,

50, பத்ரையன் தெருவு, சென்னை.

பதிப்புரிமை] 1945 [விலை அணா 5

சேக்கிழார்

இலக்கணமும் கட்டுரையும்

(இரண்டாம் புத்தகம்—நான்காம் வகுப்பு)

(1939-ம் வருடத்தின் பாடத்திட்டப்படி தயாரிக்கப்பட்டது)

494·8115

ஆசிரியர்:

வித்வான் மா. இராசமாணிக்கம், B.O.L.,

தமிழ் ஆசிரியர்,

முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.

813

மாடல் பப்ளிகேஷன்ஸ்,

50, பத்ரையன் தெரு, சென்னை.

பதிப்புரிமை] 1945 [விலை அணா 5

Ist Edition — Nov. 1942.
Reprint — July, 1945.

P31, J:2

Printed at the India Printing Works, Mylapore.—10-7-45—3000.

... OF THE ... MADRAS
20 SEP 1945
813

முன்னுரை

சேக்கிழார் இலக்கணமும் கட்டுரையும் என்னும் பெயர்கொண்ட இச்சிறு நூல் நான்காம் வகுப்பு மாண வர்க்கு எழுதப்பட்டது. இஃது கல்வித் துறையினர் 1939ல் வெளியிட்ட பாட இயல் (Syllabus) படி அமைந்தது.

இலக்கணம் (1) எழுவாய்-பயனிலைகளின் பொ ருத்தம், (2) மூன்று காலங்கள், (3) அவற்றைச் சரி யாகப் பயன்படுத்தும் முறை, (4) பிற இலக்கணக் குறிப்புகள், (5) காமா, முற்றுப்புள்ளி, நேர் கூற்றுக் குறிகள், இவற்றைப் பயன்படுத்தும் முறை-என்னும் குறிப்புகள் பாட இயலிற் கண்டவை.

இக் குறிப்புகள் அனைத்தும் போதிய பயிற்சிகளு டனும் தேர்வு வினாக்களுடனும் இந் நூலுள் இடம் பெற்றுள்ளன. இலக்கணக் குறிப்புகள் எல்லாம் மிகத் தெளிவாக விளக்கப் பெற்றுள்ளன.

கட்டுரை (Composition) சொல்லும் பயிற்சி (Oral Composition) :—கதை அல்லது நிகழ்ச்சிக்கு வேண் டும் குறிப்புகளைத் தயாரித்து முறைப்படுத்திக் கூறு தல். எழுதும் பயிற்சி (Written Composition):— (1) சொந்தக் கடிதங்களும் மற்றக் கடிதங்களும் எழு தப் பழகுதல், (2) வருடப் பிற்பகுதியில் தாமே அநு பவப்பட்ட நிகழ்ச்சிகளை எழுதப் பழகுதல் - என்ப னவே பாட இயலிற் கண்டவை.

இக் குறிப்புகள் இந் நூலுள் இரண்டாம் பகுதியில் அடங்கி உள்ளன. சொல்லும் பயிற்சிக்காக 12 கதைகளும் 6 நிகழ்ச்சிகளும் தெளிவாகத் தரப்பட்டுள்ளன. எழுதும் பயிற்சிக்காக (1) ஆசிரியர்க்கு இரண்டும், தகப்பனுர்க்கு இரண்டும், பிற கடிதங்கள் இரண்டும் ஆக 6 கடிதங்கள் தரப்பட்டுள்ளன; (2) நிகழ்ச்சிகளை எழுதிப் பழக 12 மாதிரி நிகழ்ச்சிகள் தெளிவாகத் தரப்பட்டுள்ளன.

சுருங்கக் கூறின், சிறந்த கல்வி அநுபவம் வாய்ந்த பேரறிஞர் வகுத்த பாட இயலை (Syllabus) அடிப்படையாகக் கொண்டே இச்சிறு நூல் புதிய முறையில் - எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது என்பதை இதனைக் கண்ணுறும் அறிஞர் அறிதல் கூடும்.

முத்தியாலுபேட்டை
உயர்கலைக் கழகம்
சென்னை.

மா. இராசமாணிக்கம்.

பொருளடக்கம்

எண்	பொருள்	பக்கம்
	இலக்கணம்	
1.	எழுவாய் - பயனிலை - செயப்படு பொருள் ...	1
2.	எழுவாய் - பயனிலைகளின் பொருத்தம் ...	4
3.	மூன்று காலங்கள்	11
4.	வினைச் சொல்	14
5.	பெயரும் வினைமுற்றும்	16
6.	நிறுத்தக் குறிகள்	18
7.	பரீக்ஷை வினாக்கள்	20
	கட்டுரை	
	சொல்லும் பயிற்சி :—	
1.	கதைகளைக் கூறப் பழகுதல் (12 கதைகள்)	24
2.	நிகழ்ச்சிகளைக் கூறப் பழகுதல் (6 நிகழ்ச்சிகள்)	35
	எழுதும் பயிற்சி :—	
1.	கடிதம் எழுதுதல்	
	(1) ஆசிரியர்க்கு எழுதுதல்	40
	(2) தகப்பனருக்குக் கடிதம்	41
	(3) நண்பர்களுக்கு எழுதும் கடிதம் ...	43
	(4) வியாபாரக் கடிதம்	44
	(5) காரியக் கடிதம்	45
2.	நிகழ்ச்சிகளைப் பற்றி எழுதுதல் (12 நிகழ்ச்சிகள்)	47

சேக்கிழார்

இலக்கணம்

1. எழுவாய்-பயனிலை-செயப்படு பொருள்

கருத்து முடிந்து நிற்கும் சொற்றொடர் வாக்கி யம் என்பதை நீங்கள் மூன்றும் வகுப்பில் படித்தீர் கள் அல்லவா ? அவ் வாக்கியத்தில் உள்ள எழுவாய் - பயனிலை - செயப்படுபொருள் என்னும் மூன்று சிறந்த உறுப்புகளைப் பற்றியும் அவ் வகுப்பிலேயே ஒருவாறு அறிந்தீர்கள் அல்லவா ? இங்கு மீண்டும் ஒரு முறை அவற்றை விளக்குவோம் :

இராமன் புத்தகம் வாங்கினன்—இது ஒரு வாக் கியம்.

(1) இதில், **வாங்கினன்** என்பது **வினைமுற்று.** இது வாக்கியத்தில் வரும்பொழுது **பயனிலை** எனப் படும்.

(2) வாங்கினன் என்பதற்கு முன் **'யார்'** என் பதை வைத்து, **'யார் வாங்கினன்?'** என்று கேட் டால், **'இராமன்'** என்பது பதில் ஆகும். இப்படி வரும் பதில், **எழுவாய்** (வினையைச் செய்பவன்) எனப்படும்.

(3) மீண்டும், வாங்கினான் என்பதன் முன் **யாரை** அல்லது எதை என்பவற்றுள் ஏற்றதை வைத்து, 'எதை வாங்கினான்?' என்று கேட்டால் **புத்தகம்** என்பது பதில் ஆகும். இப்பதிலே **செயப்படு பொருள்** எனப்படும்.

(4) **நடந்து வந்தேன்.**—இந்த வாக்கியத்தில் **வந்தேன்** என்பது **பயனிலை**. 'யார் வந்தேன்?' என்று கேட்டால், **நான்** என்பது பதில் ஆகும். அதுவே **எழுவாய்**. ஆனால், இந்த வாக்கியத்தில் எழுவாய் இல்லை. அது தோன்றாமல் (மறைந்து) இருக்கிறது. இப்படி மறைந்து வரும் எழுவாய் **தோன்றா எழுவாய்** எனப்படும்.

(5) கண்ணன் நல்ல **பையன்.**—இந்த வாக்கியத்தில் வினைமுற்று இல்லை. ஆனால் **பையன்** என்னும் பெயரே (பையனாக இருக்கிறான் என்று) வினைமுற்றுப் பொருளில் பயனிலையாக வந்துள்ளது. இவ்வாறு பெயர்ச்சொல் பயனிலையாக வருவது **பெயர்ப் பயனிலை** எனப்படும்.

படைத்தவர் **கடவுள்.** இதில் **கடவுள்** என்பது **பெயர்ப் பயனிலை**.

(6) அவன் **யார்?**—இந்த வாக்கியத்திலும் **வினைப்** பயனிலை இல்லை. ஆனால், **யார்** என்னும் **வினாச்** சொல்லே (யாராக இருக்கிறான்? என்று) பயனிலைப் பொருளில் வந்துள்ளது. இவ்வாறு வினாச் சொல் பயனிலையாக வருவது **வினாப் பயனிலை** எனப்படும்.

பயிற்சி

1. கீழ் வருவனவற்றில் உள்ள வாக்கியங்கள் எவை?

(1) நான் நடந்து வந்து
(2) நான் பாடம் படித்தேன்
(3) எழுந்து வந்த அவன்
(4) நடந்து சென்ற நடராசன் விழுந்து
(5) கண்ணன் விழுந்து எழுந்தான்

2. கீழ் வரும் வாக்கியங்களில் உள்ள எ. ப. செ. (கீழ்க் கண்டபடி கட்டம் போட்டு எழுது:—

எண்	எழுவாய்	பயனிலை	செயப்படுபொருள்
1			
2			
3			
4			
5			

1. அம்மணி அப்பளம் செய்தாள்.
2. கண்ணன் குழல் ஊதுகிறான்.
3. வண்ணான் துணி தப்புவான்.
4. குயவன் பானை செய்வான்.
5. கோகிலம் பாட்டுப் பாடினாள்.
6. வரதன் வடை தின்கிறான்.
7. குதிரை வண்டி இழுக்கிறது.
8. பூனை எலிகளைத் துரத்துகின்றது.
9. தெருவில் பழத்தோலை எறியாதே.
10. எழுந்து வா.
11. முருகன் நல்ல பையன்.
12. அவர் யார்?

2. எழுவாய்-பயனிலைகளின் பொருத்தம்

1. **நான் வந்தேன்.**—இதில் நான்-எழுவாய்; வந்தேன்-பயனிலை. நான் என்பது ஒருமை எண்; வந்தேன் என்பதும் ஒருமை எண். எனவே, ஒரு வாக்கியத்தில் எழுவாய் எந்த எண்ணில் வருகிறதோ, அதே எண்ணில் பயனிலையும் வரும் என்பதை அறிக.

2. **நாங்கள் வந்தோம்.**—இதில் நாங்கள்-எழுவாய்; வந்தோம்-பயனிலை. எழுவாய் (நாங்கள்)-பன்மை எண்; பயனிலை (வந்தோம்)-பன்மை எண்.

3. **எலிகள் ஓடின.**—இதில் எலிகள்-எழுவாய்: ஓடின-பயனிலை. எழுவாய் (எலிகள்)-பன்மை எண்; பயனிலை (ஓடின)-பன்மை எண்.

இங்ஙனமே எல்லா வாக்கியங்களிலும் எழுவாயும் பயனிலையும் ஒரே எண்ணாக இருக்கும்.

பயிற்சி

1. இவ்வாக்கியங்களில் உள்ள எ. ப. செ. (கட்டம் போட்டு) எழுது :—

(1) கண்ணன் நல்ல பையன்.

(2) வரதன் எங்குப் போனான் ?

(3) கண்ணகி பாடம் படித்தாளா ?

(4) தாமஸ் என்பவன் யார் ?

(5) பெட்டியைத் திறந்தாயோ ?

(6) போய் வா.

2. இவ் வாக்கியங்களில் உள்ள எழுவாய்-பயனிலை களின் பொருத்தத்தைக் காட்டு ;—

(1) வீரர்கள் துப்பாக்கி எடுக்கிறார்கள்.
(2) அரசன் வாளை வீசுகிறான்.
(3) அரசி வீணை வாசிக்கிறாள்.
(4) குதிரை கொள்ளைத் தின்றது.
(5) குதிரைகள் கொள்ளைத் தின்றன.
(6) நாங்கள் விரைவாக நடக்கிறோம்.
(7) நீங்கள் மெதுவாக நடப்பீர்கள்.
(8) நான் பாட்டுப் பாடுவேன்.
(9) நீ தாளம் போடுவாய்.

திணை—பொருத்தம்

திணை என்பது குலம்.

(1) மனிதர், தேவர் - **உயர்திணை.**

(2) மற்ற உயிர் உள்ளவையும் இல்லாதவை யும் - **அஃறிணை** (உயர்வு அல்லாத திணை.)

1. இராமன் வந்தான்.—இவ்வாக்கியத்தில்,

இராமன் - பெயர்ச் சொல், எழுவாய், ஒருமை எண், **உயர்திணை.**

வந்தான் - வினைச் சொல், பயனிலை, ஒருமை எண், **உயர்திணை.**

2. கழுதை வந்தது.—இந்த வாக்கியத்தில்,

கழுதை - பெயர்ச் சொல், எழுவாய், ஒருமை எண், **அஃறிணை.**

வந்தது - வினைச் சொல், பயனிலை, ஒருமை எண், **அஃறிணை.**

இப்படியே எல்லா வாக்கியங்களிலும் எழுவாயும் பயனிலையும் திணைப் பொருத்தம் உடையனவாகவே இருக்கும்.

பால்—பொருத்தம்

பால் என்பது திணையின் உட்பிரிவு. **ஆண்பால், பெண்பால், பலர்பால்** - இவை உயர்திணைப் பிரிவுகள். **ஒன்றன்பால், பலவின்பால்** - இவை அஃறிணைப் பிரிவுகள்.

(1) அவன், இராமன்	— ஆண்பால்	உயர்திணை.
(2) அவள், சீதை	— பெண்பால்	
(3) அவர்கள், அரசர்கள், ஆடவர், பெண்டிர்	பலர்பால்	

(1) அது, பசு, மலை	— ஒன்றன்பால்	அஃறிணை.
(2) அவை, பசுக்கள், மலைகள்	—பலவின்பால்	

இராமன் வந்தான்.—இதில் **இராமன்** - ஆண்பால், பெயர்ச் சொல். அவனே வந்தவன் ஆதலால், **வந்தான்** என்னும் பயனிலையும் ஆண்பாலே ஆகும். இவ்வாறே எல்லா வாக்கியங்களிலும் வரும் எழுவாய் - பயனிலைகள் பால் பொருத்தம் உடையனவாக இருக்கும்.

எண்—பொருத்தம்

எண் - பொருள்களின் எண்ணிக்கை. இது **ஒருமை - பன்மை** என இரு வகைப்படும். எழுவாய்-

பயனிலைகள் இவற்றில் ஒத்திருத்தலை முன்பே படித்தீர்கள் அல்லவா ?

கந்தன் வந்தான்.—இதில்,

கந்தன் - பெயர்ச்சொல், எழுவாய், உயர்திணை, ஆண்பால், ஒருமை எண்.

வந்தான் - வினைச்சொல், பயனிலை, உயர்திணை, ஆண்பால், ஒருமை எண்.

இவ்வாறே எழுவாயும் பயனிலையும் ஓரே எண் உடையனவாக இருக்கும்.

இடம்—பொருத்தம்

இடம் - பொருள் வழங்கும் ஸ்தானம். அவை (1) தன்மை இடம், (2) முன்னிலை இடம், (3) படர்க்கை இடம் என மூவகைப்படும்.

(1) நான், நாம், நாங்கள் —**தன்மை இடம்**

(2) நீ, நீர், நீங்கள் —**முன்னிலை இடம்**

(3) அவன், அவள், அவர், அது, அவையும் எல்லாப் பெயர்களும் —**படர்க்கை இடம்**

(1) கந்தன் வந்தான்.—இதில்,
கந்தன் - படர்க்கைஇடம்.
வந்தான்-படர்க்கை இடம்.

(2) நான் வந்தேன்.—இதில்,
நான்-தன்மை இடம்.
வந்தேன் - தன்மை இடம்.

(3) **நீ வந்தாய்.**—இதில்,

நீ - முன்னிலை இடம்.

வந்தாய் - முன்னிலை இடம்.

இவ்வாறே ஒவ்வொரு வாக்கியத்திலும் வரும் **எழுவாய் -பயனிலைகள் இடத்தில் ஒத்தே இருக்கும்.**

எழுவாய்—பயனிலைகளின் பொருத்தம்

இதுவரை நீங்கள் அறிந்தது என்ன? **எழுவாயும் பயனிலையும் திணை, பால், எண், இடம் இவற்றில் பொருத்தம் உடையனவாகவே இருக்கும்** என்பதை அறிந்தீர்கள் அல்லவா? இப் பொருத்தங்களை எல்லாம் கீழே காண்க.

1. **வள்ளி முருகனை மணந்தாள்**—இதில், வள்ளி- எழுவாய், மணந்தாள் - பயனிலை.

வள்ளி—பெயர்ச்சொல், உயர்திணை, பெண்பால். ஒருமை எண், படர்க்கை இடம்.

மணந்தாள்—வினைச்சொல், உயர்திணை, பெண் பால், ஒருமை எண், படர்க்கை இடம்.

இங்ஙனமே எழுவாய் - பயனிலைகளின் பொருத்தத்தைக் கூறுதல் வேண்டும்.

2. **நான் வந்தேன்**—இதில் நான் - எழுவாய், வந்தேன் - பயனிலை.

நான் - பெயர்ச்சொல், எழுவாய், ஒருமை எண், தன்மை இடம்.

வந்தேன்-வினைச்சொல், பயனிலை, ஒருமை எண், தன்மை இடம்.

தன்மைப் பெயர்களாகிய நான், நாம், நாங்கள் என்பவற்றை உயர்திணைப் பொருள்களும் அஃறிணைப் பொருள்களும் பேசக்கூடும் - அல்லது (அஃறிணைப் பொருள்கள்) பேசுவதாகப் புலவர்கள் பாடக்கூடும், (பாடி இருக்கிறார்கள்). ஆதலால், அப்பெயர்களுக்குத் திணையும் பாலும் கூறுதல் முடியாது. எனவே, அவற்றை நீக்கி, மற்றப் பொருத்தங்களையே சொல்லவேண்டும்.

3. இதே விதி முன்னிலைப் பெயர்களுக்கும் (நீ, நீர், நீங்கள்) பொருந்தும் என்பதை அறிக.

நீ வந்தாய்—இதில், நீ - எழுவாய், வந்தாய் - பயனிலை.

நீ - பெயர்ச்சொல், எழுவாய், ஒருமை எண், முன்னிலை இடம்.

வந்தாய் - வினைச்சொல், பயனிலை, ஒருமை எண் முன்னிலை இடம்.

இதுவரை கூறியவற்றால், (1) தன்மை - முன்னிலைப் பெயர்களுக்குத் திணையும் பாலும் நீங்க மற்ற எல்லாப் பொருத்தங்களும் உண்டு என்பதையும், (2) படர்க்கைப் பெயர்களுக்குத் திணை, பால் உள்பட எல்லாப் பொருத்தங்களும் உண்டு என்பதையும் நன்கு உணரலாம்.

பயிற்சி

1, எழுவாய் - பயனிலைகளின் பொருத்தத்தைக் கூறுக :—

கந்தன் கழுதை மேய்த்தான், வரதன் பாடம் படிக்கிறான், நான் சோறு உண்கிறேன், நீ குழல் ஊதுகிறாய், அவன் மாலை கட்டுகிறான், நாங்கள் வேகமாக ஓடுவோம்,

நீங்கள் மெதுவாக வாருங்கள், நீ ஏன் வந்தாய்? நான் எதற்கு வந்தேன்? அவர்கள் ஆடுகிறார்கள், பூனை பால் குடிக்கிறது, எலிகள் ஓடுகின்றன.

2. இவற்றில் பெயர்ச்சொற்கள் எவை? வினைச் சொற்கள் எவை?—இராமன் சீதையை மணந்தான், இராவணன் சீதையைக் கொண்டுபோனான், இராமன் குரங்குகளோடு இலங்கைக்குச் சென்றான், இராமன் இராவணனைக் கொன்றான், இராமன் சீதையை மீட்டான், மக்கள் எல்லோரும் மகிழ்ந்தனர்.

3. மேற்சொன்ன வாக்கியங்களில் உள்ள எ. ப. செ. கூறு.

4. இராமன், சீதை, இலங்கை, குரங்குகள், மக்கள், மணந்தான், இருந்தான், இருக்கிறது, வந்தன, மகிழ்ந்தார்கள்.—ஒவ்வொன்றுக்கும் திணை, பால், எண், இடம் (கீழ்க் கண்டபடி கட்டம் போட்டு) எழுது.

பெயர்ச்சொல் அல்லது வினைச்சொல்	திணை	பால்	எண்	இடம்

5. ஒரு வாக்கியத்தில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களை எவ்வாறு கண்டு பிடிப்பது?

6. கந்தன் படித்தான், அவன் யார்? அவள் நல்லவள், நான் வருகிறேன், நீ போவாய், நீ நல்ல பிள்ளை, கண்ணன் எவன்?—இவற்றில் உள்ள (1) வினைப் பயனிலைகள் எவை? (2) வினாப் பயனிலைகள் எவை? (3) பெயர்ப் பயனிலைகள் எவை?

7. 'தோன்று எழுவாய்' என்பது யாது? நான்கு உதாரணங்கள் கொடு.

8. திணை, பால், எண், இடம்—இவை இன்னவை எனக் கூறு.

---

3. மூன்று காலங்கள்

செயல் நடக்கும் பொழுதே **காலம்** எனப்படும்.

1. **இறந்த காலம்**—தமிழ் மொழி பல ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் **உண்டானது**.—இதில் 'உண்டானது' என்பது வினைமுற்று. இது எந்தக் காலத்தைக் குறிக்கிறது? இது, நடந்துபோன காலத்தைக் குறிக்கிறது. இவ்வாறு செயல் நடந்துவிட்ட காலம் **இறந்த காலம்** எனப்படும்.

வந்தான், படித்தான், ஆடினர், ஓடிற்று, பாடின.— **இறந்த கால வினை முற்றுகள்.**

2. **நிகழ் காலம்**—ஆசிரியர் பாடம் **போதிக்கிறார்**.—இதில், 'போதிக்கிறார்' என்பது இப்பொழுது செயல் நடக்கிறதை (நிகழ்வதைக் காட்டும் வினை முற்று. எனவே, இது **நிகழ்கால வினைமுற்று** ஆகும். **செயல் நடக்கிற காலம் நிகழ் காலம்** எனப்படும்.

வருகிறான், படிக்கிறான், ஆடுகிறார், ஓடுகிறது, பாடுகின்றன—**நிகழ் கால வினை முற்றுகள்**.

3. **எதிர்காலம்**—முருகன் நாளை வருவான். இதில், 'வருவான்' என்பது இனி நடக்கும் தொழிலை

உணர்த்துவது ; அஃதாவது எதிர்காலத் தொழிலை உணர்த்துவது. எனவே, வருவான் என்பது எதிர் கால வினைமுற்று. தொழில் இனி நடக்க இருக்கும் காலம் எதிர் காலம் ஆகும்

வருவான், படிப்பான், ஆடுவர், ஓடும், (அவை) பாடும் - எதிர் கால வினை முற்றுகள்.

குறிப்பு ;—பெயர்ச் சொல்லுக்குக் காலம் இல்லை வினைச்சொல்லுக்குக் காலம் உண்டு.

பயிற்சி

1. இறந்த காலம் - பொருள் யாது? உதாரணம் தந்து விளக்கு.

2. நிகழ் காலம் - பொருள் என்ன? உதாரணம் தந்து விளக்கு.

3. எதிர் காலம் - பொருள் யாது ? உதாரணம் தந்து விளக்கு.

4. இவ்வினை முற்றுகள் குறிக்கும் காலங்கள் எவை ? கீழ்க்கண்டவாறு கட்டம் போட்டு எழுது.

எண்	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர் காலம்
1			
2			
3			
4			
5			
6			

(1) இராமன் இராவணனைக் கொன்றான்.
(2) அவர்கள் வேலை செய்கிறார்கள்.
(3) நான் பாடம் படிப்பேன்.
(4) முருகன் வள்ளியை மணந்தான்.
(5) வள்ளி பாடம் படிக்கிறாள்.
(6) தாயார் உணவு ஊட்டுவார்.
(7) கண்ணன் வெண்ணெய் தின்றான்.
(8) தமயந்தி கோலம் போடுகிறாள்.
(9) தாத்தா புத்தி சொல்லுவார்.

5. மேல்கண்ட வாக்கியங்களில் உள்ள எ. ப. செ. கட்டம் போட்டு எழுதிக் காட்டு.

6. நான் — படிப்பேன், அவர்கள் — செய்கிறார்கள், தாயார்—ஊட்டுவார், கண்ணன்—தின்றான், இவ் வெழு வாய்களுக்கும் பயனிலைகளுக்கும் உள்ள பொருத்தத்தைக் காட்டு.

7. கோடிட்ட இடங்களில், கீழ் உள்ள வினை முற்று களில் பொருத்தமானவற்றை எழுது :—

வந்தான்	படிக்கிறான்
ஆடுவேன்	தூங்கினோம்.
அழுகிறது	மேய்கின்றன

1. வரதன் நேற்று ——.
2. கமலம் இப்பொழுது பாடம் ——.
3. நான் நாளை ——.
4. பசுக்கள் இப்பொழுது புல்லை——.
5. குழந்தை பால் வேண்டி ——.
6. நாம் நேற்று நன்றாய்த் ——.

8. 6-ஆம் கேள்வியில் உள்ள பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் கட்டம் போட்டு எழுதிக் காட்டு.

9. பிழைகளைத் திருத்திக் கூறு :—(1) நான் நேற்று வருவேன். (2) நீ நாளை வந்தாய். (3) அவன் இன்று காலை வருவான். (4) அவள் நேற்றுத் தண்ணீர் முகப்பாள். (5) நாங்கள் நாளை உண்டோம். (6) அவர்கள் இன்று மாலை

பாடினூர்கள். (7) மாடுகள் இப்பொழுது போயின; மேய்ந்து மாலையில் வந்தன. (8) பசு நாளை நிரம்பப் பால் கொடுத்தது.

10. நின்ருர், வருகின்றன, வருவான்.—ஒவ்வொன்றுக்கும் உரிய மற்ற இரண்டு காலங்களையும் சொல்.

---

4. வினைச் சொல்

வந்தான், வந்து, வந்த—இம் மூன்றும் வினைச் சொற்களே என்பதை மூன்ரும் வகுப்பில் படித்தீர்கள் அல்லவா ?

(1) இராமன் **வந்தான்**—இதில், **வந்தான்** என்பது இராமன் செய்த வினையை (தொழிலை) உணர்த்துவதால் **வினைச் சொல்.**

(2) இராமன் **வந்து** (போனுன்)—இதில், **வந்து** என்பது இராமன் செய்த வினையை (தொழிலை) யே உணர்த்தலால் **வினைச் சொல்** ஆகும்.

(3) **வந்த** இராமன்—இதில், **வந்த** என்பதும் இராமன் செய்த வினையை (தொழிலை)யே குறித்தலால் **வினைச் சொல்** ஆகும்.

ஆயினும் இவற்றுள்

(1) **வந்தான்** என்பது **முற்ருக** (பொருள் முடிந்து) நிற்கிறது.

(2) **வந்து** என்பது **எச்சமாக** (பொருள் முடியாமல்) இருக்கிறது.

(3) **வந்த** என்பதும் எச்சமாக இருக்கிறது.

ஆதலால்,

(1) **வந்தான்** என்பது **வினை முற்று.**

(2) **வந்து** என்பது 'போனுன்' என்னும் வினைச் சொல்லைக் கொண்டு முடிகிறது. ஆதலால் இது **வினை எச்சம்** எனப்படும்.

(3) வந்த என்பது 'இராமன்' என்னும் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிகிறது. ஆதலால் இது பெயர் எச்சம் எனப்படும்.

எனவே,

வந்தான் - வினை முற்று.

வந்து - வினை எச்சம்.

வந்த - பெயர் எச்சம் என்பதை அறிக.

பயிற்சி

1. கீழ்க்கண்ட வினைச் சொற்களில் உள்ள வினை முற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைக் கட்டம் போட்டு எழுது :—வரதன் படித்தான், வரதன் படித்து வந்தான், படித்த வரதன், தூங்கிய மாமன், அவன் தூங்கி வந்தான், மாமன் தூங்கினான், ஆடிய அண்ணாமலை, ஆடி வந்தான், அண்ணாமலை ஆடினான், புலவர் எழுந்தார், எழுந்த புலவர், புலவர் எழுந்து வந்தார், கண்ணன் பாடினான், பாடின கண்ணன், கண்ணன் பாடிப் போனான், கோகிலம் வாசிக்கிறாள், வாசிக்கிற கோகிலம், கோகிலம் வாசிக்க வருவாள்.

எண்	வினைமுற்று	வினையெச்சம்	பெயரெச்சம்

2. வந்தான், போனான், பேசினார், எழுதுகிறது, ஓடுகின்றன.—இவற்றை வினையெச்சங்களாகவும் பெயர் எச்சங்களாகவும் மாற்றுக.

3. படித்த, நடந்த, குதித்த, ஆடின, ஓடுகிற.—இப் பெயர் எச்சங்களை வினை யெச்சங்களாகவும் வினைமுற்றுகளாகவும் மாற்றுக.

4. எழுதி, எழுந்து, இடித்து, கோபித்து, சிரித்து.—இவ் வினையெச்சங்களை வினைமுற்றுகளாகவும் பெயர் எச்சங்களாகவும் மாற்றுக.

---

5. பெயரும் வினைமுற்றும்

1. **இராமன் வந்தான்.**—இதில்,
   இராமன் — ஆண்பால் பெயர்
   வந்தான் — ஆண்பால் வினைமுற்று
2. **சீதை வந்தாள்.**—இதில்,
   சீதை — பெண்பால் பெயர்
   வந்தாள் — பெண்பால் வினைமுற்று
3. **அவர்கள் வந்தார்கள்.**—இதில்,
   அவர்கள் — பலர்பால் பெயர்
   வந்தார்கள் — பலர்பால் வினைமுற்று
4. **குதிரை வந்தது.**—இதில்,
   குதிரை — ஒன்றன்பால் பெயர்
   வந்தது — ஒன்றன்பால் வினைமுற்று
5. **குதிரைகள் வந்தன.**—இதில்,
   குதிரைகள் — பலவின்பால் பெயர்
   வந்தன — பலவின்பால் வினைமுற்று
6. **நான் வந்தேன்.**—இதில்,
   நான் — தன்மை ஒருமைப் பெயர்
   வந்தேன் —தன்மைப் ஒருமை வினைமுற்று
7. **நாங்கள் வந்தோம்.**—இதில்,
   நாங்கள் —தன்மை பன்மைப் பெயர்
   வந்தோம் —தன்மைப் பன்மை வினைமுற்று

8. **நீ வந்தாய்.**—இதில்,

நீ — முன்னிலை ஒருமைப் பெயர்

வந்தாய் — முன்னிலை ஒருமை வினைமுற்று

9. **நீங்கள் வந்தீர்கள்.**—இதில்,

நீங்கள் — முன்னிலைப் பன்மைப் பெயர்

வந்தீர்கள் — முன்னிலைப் பன்மை வினைமுற்று

பெயர்ச்சொல்லும் முக்கால வினைமுற்றுகளும்

10. இங்குள்ள பெயர்ச்சொற்களையும் மூன்று கால வினைமுற்றுகளையும் நன்ருகப் படித்து அறிந்து கொள்க :—

பெயர்ச் சொல்	வினை முற்று		
	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர் காலம்
1. நான்	வந்தேன்	வருகிறேன்	வருவேன்
2. நாங்கள்	வந்தோம்	வருகிருேம்	வருவோம்
3. நீ	வந்தாய்	வருகிருய்	வருவாய்
4. நீங்கள்	வந்தீர்கள்	வருகிறீர்கள்	வருவீர்கள்
5. அவன், முருகன்	வந்தான்	வருகிருன்	வருவான்
6. அவள், வள்ளி	வந்தாள்	வருகிருள்	வருவாள்
7. அவர்கள், வீரர்கள்	வந்தார்கள்	வருகிருர்கள்	வருவார்கள்
8. அது, ஆடு	வந்தது	வருகிறது	வரும்
9. அவை, ஆடுகள்	வந்தன	வருகின்றன	வரும்

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் கீழ்க்கண்ட பகுதிகளின் இறந்தகால வினைமுற்றுகளை அமைத்துக் கூறு :—

நட	இரு	நடு
பசு	எழு	பேசு

(1) நான்——. (2) நாங்கள்——. (9) நீ——.
(4) நீங்கள்——. (5) கோபாலன்—. (6) அம்மணி—.
(7) அரசர்கள்—. (8) யானை——. (9) மாடுகள்—.

2. கோடிட்ட இடங்களில் மேல்கண்ட பகுதிகளின் நிகழ்கால வினைமுற்றுகளை அமைத்துப் படி :—

(1) நான்——. (2) நாங்கள்—. (3) நீ——.
(4) நீங்கள்—. (5) வரதன்—. (6) கோமளம்——.
(7) வீரர்கள்—. (8) புலி——. (9) புலிகள்——.

3. கோடிட்ட இடங்களில் மேற்கண்ட பகுதிகளின் எதிர்கால வினைமுற்றுகளை அமைத்துப் படி :—

(1) குதிரை—. (2) பசுக்கள்—. (3) தாமஸ்——.
(4) மேரி——. (5) குருமார்—. (6) நாங்கள்——.
(7) நீ——. (8) நான்——. (9) நீங்கள்——.

---

6. நிறுத்தக் குறிகள்

படிக்கும்பொழுது கருத்து விளங்குவதற்காகச் சில இடங்களில் நிறுத்தி வாசிக்க வேண்டும் நிலைமை ஏற்படுகிறது. இந்த இடங்களில் இன்ன இன்ன படி நிறுத்தவேண்டும் என்னும் அளவு உண்டு; அதற்கு உரிய அடையாளங்களும் உண்டு. (1) அவற்றுள் ஒன்று முற்றுப்புள்ளி - அது வாக்கி

யத்தின் முடிவில் இடவேண்டுவது. (2) வாக்கியத்தின் இடையில் சில இடங்களில் காமா , போட வேண்டி வரும். வாக்கியம் நீளமாக இருந்தால், சில இடங்களில் காமா போட நேரும்.

அவன் என்னைப் பார்த்து, "எழுந்து வா" என்றான்.

1. இதில், அவன் என்னைப் பார்த்து என்பது ஒரு விஷயம்; பிறகு, அவன் சொன்னது வேறு விஷயம். இந்த இரண்டு விஷயங்களையும் பிரிக்க நடுவில் காமா போடவேண்டும்.

1. "எழுந்து வா" என்பது அவன் நேரே சொன்ன விஷயம். ஆதலால், அது " " இந்தக் குறிகளுக்கு இடையில் நிற்கிறது. பிறர் சொல்லுவதை அப்படியே சொல்லும் போது இந்த " " நேர் கூற்றுக் குறிகள் இட வேண்டும்.

3. ஒவ்வொரு சாதாரண வாக்கியத்தின் முடிவிலும் முற்றுப் புள்ளி இடவேண்டும்.

4. அவன் யார் - இது கேள்வி வாக்கியம். ஆதலால், இதன் முடிவில் கேள்விக் குறி ? இடவேண்டும். அவன் யார் ?

பயிற்சி

1. காமா, முற்றுப்புள்ளி, கேள்விக்குறி, நேர்கூற்றுக் குறிகள் இவற்றை எங்கெங்கு இடவேண்டும் ?

2. தக்க குறிகளை இடு :—

(1) அவன் காலையில் எழுந்தான்

(2) அவன் காலையில் எழுந்து கருத்தாய்ப் படித்தான்.

(3) அவன் உன் மாமன் மகனா

(4) அவன் உன் மாமன் மகனா என்று இராமன் என்னைக் கேட்டான்

(5) முருகன் நேற்று நீ எங்குப் போனாய் என்று என்னைக் கேட்டான்.

(6) நான் நேற்று நான் கடைக்குப் போனேன் என்று பதில் கூறினேன்.

---

7. பரீக்ஷை வினாக்கள்

1. பெயர்ச்சொல் என்பது யாது? வினைச்சொல் என்பது யாது?

2. வாக்கியம் என்பது யாது? உதாரணம் கொடு.

3. ஒரு வாக்கியத்தில் எ. ப. செ. கண்டு பிடிப்பது எப்படி?

4. தோன்றா எழுவாய் - உதாரணத்தால் விளக்கு.

5. பயனிலை என்பது என்ன? அது எத்தனை வகைப் படும்? உதாரணம் தருக.

6. நாய் வாலை ஆட்டுகிறது, தாய் கையை நீட்டினாள், இலைகள் அசைகின்றன. இவர் மிகவும் நல்லவர், அவர் யார்? சிறுவன் குளத்தில் கன்றைக் குளிப்பாட்டுகிறான், தகப்பனார் கடிதம் எழுதுவார், மங்களம் மாலை கட்டுவாள். —இவற்றில் உள்ள எ. ப. செ. கட்டமிட்டு எழுதுக.

7. திணை, பால், எண், இடம் - இவை யாவை? ஒவ்வொன்றன் வகை என்ன?

8. கந்தன், வள்ளி, கிளி, மலைகள், அரசர்கள் - இப்பெயர்ச் சொற்களுக்குத் திணை, பால், எண், இடம் கூறுக.

9. வந்தான், சென்றான், போகிறது, போகின்றன, தூங்குவார்.—இவ்வினைமுற்றுகளுக்குத் திணை, பால், எண், இடம் கூறுக.

10. பிள்ளைகள் படிக்கிறார்கள், மாடுகள் மேய்கின்றன, கண்ணன் குளிக்கிறான், தனம் பாடுகிறாள். கழுதை கத்துகிறது, நான் எழுதுகிறேன், நீ நிற்கிறாய், நாங்கள் பேசுகிறோம், நீங்கள் சிரிக்கிறீர்கள்—இந்த 9 வாக்கியங்களிலும் உள்ள எழுவாய்—பயனிலைகளின் பொருத்தத்தை விளக்குக.

11. நான் வரதனுடன் போகையில் நீ எதிரே வந்தாய், நீங்கள் சாப்பிடும்பொழுது நாங்கள் பாடிக்கொண்டு இருந்தோம், தனம் வீணை வாசிக்கையில் நீயும் நானும் கேட்டு மகிழ்ந்தோம், ஆற்றில் நீராடுகையில் நானும் அவனும் வந்தோம்—இவற்றில் உள்ள மூன்று இடப்பெயர்களையும் கட்டத்தில் எழுதிக் காட்டுக.

12. தன்மை - முன்னிலைப் பெயர்கள் எவை ?

13. அவற்றுக்கு எவற்றைக் கூற முடியாது ? ஏன் ?

14. நான் படிக்கிறேன். நாங்கள் பேசுவோம்: நீ கேட்டாய், நீங்கள் ஏன் சிரிக்கிறீர்கள் ?—இவற்றில் உள்ள எழுவாய்—பயனிலைகளின் பொருத்தம் கூறுக.

15. பரந்தாமன் பலகை வாங்கினான், சொக்கம்மாள் சோறு சமைத்தாள்,—இவற்றில் உள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் திணை, பால், எண், இடம் (கட்டம் போட்டு) எழுதிக் காட்டுக.

16. மூன்று காலங்கள் எவை? 'காலம்' என்பது யாது ?

17. அடித்தான், உதைக்கிறாள், எடுப்பார், பிடிக்கிறது, ஓடின, பார்த்தேன், வருவோம், செய்வாய், நிற்கிறீர்கள்,—இவை எவ்வெக் கால வினைமுற்றுகள்? கட்டம் இட்டு எழுதிக் காட்டுக.

18. பெயர்ச் சொற்களுக்கு ஏற்ற வினைச் சொற்களைச் சேர்த்து எழுதுக.

(1)	மீன்	—	பால் தரும்
(2)	மாணவர்	—	முட்டை இடும்
(3)	கழுதை	—	பாடம் படிப்பர்
(4)	ஆடு	—	பொதி சுமக்கும்

19. கோடிட்ட இடங்களில் தக்க வினைச் சொற்களை அமைத்து எழுதுக ;—

(1) நான் பாடம் ——. (படித்தான், படித்தேன்)
(2) அவன் தலையைச் —.... (சீவினான், சீவினாள்)
(3) நீ நீரில் ——. (குளித்தான், குளித்தாய்)
(4) குதிரை வண்டி ——. (இழுக்கின்றன, இழுக்கிறது)
(5) மீன்கள் நீரில் ——. (நீந்துகிறது, நீந்துகின்றன)
(6) அவர்கள் பாடம் ——. (படித்தான், படித்தாள், படிக்கிறார்கள்)

20. கோடிட்ட இடங்களில் தக்க எண் உள்ள வினைமுற்றுகளை அமைத்து எழுதுக :—

(1) நான் புத்தகம் ——. (வாங்கினோம், வாங்கினேன்)
(2) நீ பாடம் ——. (படிப்பீர்கள், படிப்பாய்)
(3) வள்ளி கோலம் ——. (போட்டார்கள், போட்டாள்)
(4) முருகன் விறகு ——. (வெட்டினார்கள், வெட்டினான்)
(5) பிள்ளைகள் பள்ளிக்குப் ——, (போனான், போனாள், போனார்கள்)
(6) கழுதைகள் ——. (கத்துகிறது, கத்துகின்றன)

21. வினைமுற்று, வினையெச்சம், பெயர் எச்சம் - இவற்றை உதாரணத்தால் விளக்குக.

22. முற்றுக்கும் எச்சத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன ?

23. 'வந்து' என்பது வினையெச்சம், —எப்படி ?
'வந்த' என்பது பெயரெச்சம், —எப்படி ?

24. அத்தை வந்து போனாளா ? வந்த மாமன் வழுக்கி விழுந்தான், தூங்கிய பையன் எழுந்து நடந்தான், பார்த்த

பழமே கனிந்து இருக்கிறது, பாடி வந்தவனை எழுந்து நின்ற வன் வரவேற்ருன்,—இவற்றில் உள்ள வினைமுற்று வினை யெச்சம், பெயரெச்சங்களைக் கட்டத்தில் எழுதிக் காட்டுக.

25. நான், முருகன், நாங்கள், வீரர்கள், நீ, வண் ணாத்தி, மாடு, நீங்கள், பசுக்கள்,—இவை என்னென்ன பெயர்கள் ?

26. படித்தேன், படிப்பான், படிப்போம், படித்தார் கள், படிக்கிருய், படிப்பான், மேய்கிறது, படிப்பீர்கள், மேய்ந்தன—இவை என்னென்ன வினைமுற்றுகள்?

27. நில், படி, குனி—இப் பகுதிகளைக் கொண்ட மூன்று கால வினைமுற்றுகளை நான், நீ, கண்ணன், புலி, குரங்குகள் ஆகிய பெயர்ச்சொற்களுக்கு ஏற்பப் பொருத் திக் காட்டுக. விடையைக் கட்டத்தில் அடைத்துக் காட் டுக.

28. 'நிறுத்தக் குறிகள்' என்பன யாவை ?

29. காமா, முற்றுப்புள்ளி, நேர்கூற்றுக் குறிகள், கேள்விக்குறி—இவற்றின் பயன் என்ன ?

30. தக்க இடங்களில் தக்க குறிகளை இடுக :—

(1) கரீம் நீ என்னுடன் விளையாட வா என்ருன்

(2) அண்ணன் தம்பீ காலையில் எழுந்து படித் தாயா என்று என்னைக் கேட்டான்

(3) தகப்பனுர் கடைக்குப் போய் டமாரம் வாங்கி வந்தார்

(4) பெயர்ச்சொல்லில் திணை பால் எண் இடம் இவற்றை அறியவேண்டும்

(5) அந்த மனிதர் யார் என்று அத்தான் என்னைக் கேட்டார்.

சேக்கிழார்

கட்டுரை

சொல்லும் பயிற்சி

1. கதைகளைக் கூறப் பழகுதல்*

1. நரியும் திராக்ஷையும்

குறிப்புகள் தயாரித்தல் : திராக்ஷைக் கொல்லை– பசியால் வாடிய நரி-திராக்ஷைக் குலையைப் பார்த்தல்- பறிக்கத் தாவுதல் - மூன்று முறை தாவுதல்-குலை எட்டவில்லை - 'சீ, சீ, இந்தப் பழம் புளிக்கும்' – நரி போதல்,

கதை கூறுதல் : ஒரு திராக்ஷைக் கொல்லையில் திராக்ஷைக் குலைகள் நிரம்ப இருந்தன. அவை பந்தல் கள் மேல் இருந்து தொங்கிக்கொண்டு இருந்தன. ஒரு நரி அக் கொல்லைக்குள் சென்றது. அது மிகவும் பசியாக இருந்தது. அது ஒரு திராக்ஷைக் குலையைப் பறிக்க விரும்பியது. அது அதைப் பறிக்க மூன்று முறை தாவிப் பார்த்தது; மூன்று முறையும் குலை எட்டவில்லை. உடனே நரி, 'சீ, சீ, இந்தப் பழம் புளிக்கும்' என்று சொல்லிக்கொண்டே போய் விட்டது.

நீதி: கிடைக்காததற்கு ஆசைப்படல் ஆகாது.

---

*இவை மாதிரிக் கதைகள், இவை போன்ற பல கதை களைக் கூறப் பழக்குதல் வேண்டும்.

2. அறிவுள்ள காகம்

குறிப்புகள் தயாரித்தல்: காகம் தாகத்தால் அலைதல் - வீட்டின் பின்புறம் - மண்குடம் - அடியில் தண்ணீர்-காகத்திற்கு எட்டவில்லை-கற்களைப் போடுதல்-தண்ணீர் மேலே வருதல்-காகம் நீரைக் குடித்துப் போதல்.

கதை கூறுதல்: ஒரு நாள் ஒரு காகம் தாகத்தால் தவித்தது. அது பல இடங்களிலும் தண்ணீரைத் தேடினது. முடிவில் அது ஒரு வீட்டின் பின்புறம் ஒரு மண் குடத்தைக் கண்டது. காகம் அதில் இருந்த தண்ணீரைக் குடிக்க முயன்றது. ஆனால் தண்ணீர் அதற்கு எட்டவில்லை. உடனே அது சில கற்களைக் கொண்டுவந்து குடத்திற்குள் போட்டது. அப்பொழுது தண்ணீர் மேலே கிளம்பியது. பிறகு காகம் அத் தண்ணீரைக் குடித்துத் தாகத்தைத் தணித்துக்கொண்டது.

நீதி: அறிவுள்ளவன் எப்படியும் பிழைப்பான்.

3. எருதுகளும் சிங்கமும்

குறிப்புகள் தயாரித்தல்: ஒரு காட்டில் நான்கு எருதுகள் ஒற்றுமையாக மேய்தல்-ஒரு சிங்கம் அவற்றைக் கொல்ல முயலுதல்-முடியவில்லை-பிறகு எருதுகளுக்குள் சண்டை—அவை தனித்தனியே மேய்தல்-சிங்கம் எருதுகளை ஒவ்வொன்றாகக் கொல்லுதல்.

கதை கூறுதல்: ஒரு காட்டில் நான்கு எருதுகள் இருந்தன. அவை மிகவும் ஒற்றுமையாக மேய்ந்து கொண்டு இருந்தன. அதனால் அக் காட்டில் இருந்த

சிங்கம் அவற்றைக் கொல்ல முடியாமல் தவித்தது. ஒரு நாள் அந்த எருதுகள் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டன. அதுமுதல் அவை தனித்தனியே சென்று மேயத் தொடங்கின. சிங்கம் அந்த நிலைமையைக் கண்டு மகிழ்ந்தது. அது ஒரு நாளைக்கு ஓர் எருதாக அடித்துத் தின்றது.

நீதி : ஒற்றுமையே பலம்.

4. குகன்

குறிப்புகள் தயாரித்தல் : குகன் வேடர் தலைவன்-கங்கைக்கரை- இராமன் தம்பியுடனும் மனைவியுடனும் காடு போதல்-குகனைச் சந்தித்தல் - குகன் இராமனுக்கு நண்பன் ஆதல்-குகன் செய்த பணிவிடை - இராமன் அவனைத் தன் தம்பியாகக் கொள்ளுதல்.

கதை கூறுதல் : குகன் என்பவன் வேடர்களுக்குத் தலைவன். அவன் கங்கைக் கரையில் வசித்து வந்தான். தசரதன் பிள்ளைகள் ஆகிய இராமனும் இலக்குவனும் ஒருநாள் சீதையுடன் கங்கைக் கரைக்கு வந்தார்கள். குகன் அவர்கள் வரலாற்றைக் கேட்டு அறிந்தான்; இராமன் பெற்றோர் சொற்படி தம்பிக்கு காட்டைக் கொடுத்ததும், காட்டிற்கு வந்ததும் அறிந்து பாராட்டினன். அவன் இராமனைத் தன் உயிராக மதித்தான்; அவனுக்கு வேண்டிய பணிவிடை செய்தான். இராமன் குகன்மீது அளவற்ற அன்பு கொண்டான். இராமன் அன்று முதல் குகனைத் தன் தம்பியாகக் கொண்டான்.

நீதி : நல்லவர் நட்பே சிறந்தது.

5. உழவனும் பிரபுவும்

குறிப்புகள் தயாரித்தல் : ஓர் உழவன் - எருதின் மீது இரண்டு அரிசி மூட்டைகள் - சாலையில் போதல் - வழியில் எருது கால் வழுக்கி விழுதல்- மூட்டைகளைத் தூக்க முடியாமை-ஒரு பிரபு குதிரை மீது வருதல் - பிரபு தாமாகவே வந்து மூட்டைகளைத் தூக்கி எருதின் மீது வைத்தல் - பிரபுவின் உபதேசம்.

கதை கூறுதல் : ஒரு நாள் ஓர் உழவன் தன் எருதை ஓட்டிக்கொண்டு சாலை வழியே சென்றான். அதன் மீது இரண்டு அரிசி மூட்டைகள் இருந்தன. எருது திடீரென்று கால் தடுக்கி வீழ்ந்தது. அதனால் மூட்டைகளும் தரையில் விழுந்துவிட்டன. அவற்றைத் தூக்க உழவனால் முடியவில்லை. அந்தச் சமயத்தில் ஒரு பிரபு குதிரை மீது அங்கு வந்தார் ; உழவன் கஷ்டத்தை உணர்ந்தார். அவர் குதிரையை விட்டு இறங்கினார். பிரபு உழவனைப் பார்த்து, ‘அப்பா, மூட்டையைப் பிடி ; நாம் இருவருமாக எருதின் மீது ஏற்றுவோம்’ என்றார். உடனே இருவரும் இந்த மூட்டைகளை எருதின் மீது ஏற்றினார்கள். பிறகு பிரபு, உழவனைப் பார்த்து, ‘அப்பா, நான் உனக்கு உதவி செய்தது போலவே நீயும் பிறர்க்கு உதவி செய்’ என்று சொல்லிப் போய்விட்டார்.

நீதி : மேன் மக்கள் பிறர்க்கு உதவி செய்வார்கள்.

6 கந்தனும் கரடியும்

குறிப்புகள் தயாரித்தல் : கந்தனும் கரடியும் நண்பர்கள் - ஒரு நாள் மாலை - கந்தன் வீட்டுத் தோட்டம் - கந்தன் அயர்ந்து தூங்குதல் - கரடி எதிரே உட்கார்ந்து இருத்தல் - ஈக்கள் கந்தன் வாய்மீது மொய்த்தல் - கரடி ஈக்களை ஓட்டல் - முடியாமை - கரடி கல்லை எடுத்து ஈக்கள் மீது ஓங்கி அடித்தல் - கந்தன் அலறி எழுதல் - அவன் வாயில் இரத்தம் - நான்கு பற்கள் விழுதல் - கந்தன் கரடியை விரட்டி அடித்தல்.

கதை கூறுதல் : கந்தன் ஒரு கரடியுடன் வசித்து வந்தான். அவன் ஒரு நாள் மாலை தன் வீட்டுத் தோட்டத்தில் படுத்து அயர்ந்து தூங்கிக்கொண்டு இருந்தான். அப்பொழுது கரடி அவன் எதிரே உட்கார்ந்து இருந்தது. சில ஈக்கள் கந்தன் வாய் மீது மொய்க்கத் தொடங்கின. கரடி அவற்றைத் தன் முன் காலால் விரட்டியும் பயனில்லை. அதனால் அதற்குக் கோபம் உண்டானது. உடனே அது ஒரு பெரிய கல்லை எடுத்துக் கந்தன் வாய்மீது ஓங்கி அடித்தது. அவ்வளவே ; கந்தன் அலறிக்கொண்டு எழுந்தான். அவன் வாயில் இருந்து இரத்தம் வடிந்தது. நான்கு பற்கள் விழுந்து விட்டன. அவன் நடந்ததை அறிந்தான் ; கரடியுடன் நட்புக் கொண்டது தவறு என்பதை உணர்ந்தான்.

நீதி : யோசித்துச் சிநேகம் செய்ய வேண்டும்.

7. இரண்டு மாணவர்

குறிப்புகள் தயாரித்தல் : கோபாலனும் கோவிந்தனும் - வாய்ச் சண்டை - கைச் சண்டை - கோவிந்தன் மூக்கில் இரத்தம் - ஆசிரியர் ஒரே முக்காலி மீது இருவரையும் நிறுத்தல் - பிள்ளைகள் பார்த்து நகைத்தல் - சண்டையிட்ட மாணவர் வெட்கம் - இருவரும் நல்ல பிள்ளைகள் ஆதல்.

கதை கூறுதல் : கோபாலனும் கோவிந்தனும் நான்காம் வகுப்பு மாணவர். அவர்கள் எப்பொழுதும் சண்டையிடுதல் வழக்கம். வாய்ச்சண்டை கைச்சண்டையாக மாறுவது உண்டு. ஒரு நாள் கோபாலன் கோவிந்தன் மூக்கின்மீது ஓங்கி அடித்தான். கோவிந்தன் மூக்கில் இருந்து இரத்தம் கொட்டியது. ஆசிரியர் இருவர் மீதும் கோபம் கொண்டார்; இருவரையும் ஒரே முக்காலிமீது நிற்கச் செய்தார். அவர்கள் இருவரும் இப்படி அன்று முழுவதும் நின்றனர். வகுப்புப் பிள்ளைகள் அவர்களைப் பார்த்துப் பரிகசித்தனர். கோபாலனும் கோவிந்தனும் வெட்கம் அடைந்தார்கள். அவர்கள் தங்கள் தவற்றை மனமார உணர்ந்தார்கள். அன்று முதல் அவர்கள் இருவரும் இணைபிரியாத நண்பர்கள் ஆனார்கள்.

நீதி : மாணவர் ஒற்றுமையாக வாழ வேண்டும்.

8. சோம்பேறி வேலையாள்

குறிப்புகள் தயாரித்தல் : சொக்கப்பன் ஒரு சேவகன் - சோம்பல் உடையவன் - ஒரு நாள் எசமான் ஓர் அவசரக் கடிதம் தருதல் - மூன்று மணிக்கு அது

குறிப்பிட்ட இடத்தைச் சேர வேண்டும் - வழியில் ஆலமரம் - சொக்கப்பன் தூங்கிவிடுதல் - குறித்த நேரம் தவறுதல் - பிறகு சொக்கப்பன் ஓடுதல் - குறித்த இடம் பூட்டப்பட்டு இருத்தல் - வேலை நீக்கம்.

கதை கூறுதல் : சொக்கப்பன் ஒருவரிடம் சேவகனக இருந்தான். அவன் சோம்பேறி ; எதையும் குறித்த நேரத்தில் செய்யாதவன். ஒரு நாள் எசமானர் அவனிடம் ஓர் அவசரக் கடிதம் கொடுத்து, அதை ஓர் உத்தியோக நிலயத்தில் கொண்டு சேர்க்கச் சொன்னர். அக் கடிதம் மாலை மூன்று மணிக்குள் போய்ச் சேர வேண்டும். அதைச் சொக்கப்பனும் அறிவான். அவன் வேகமாகச் சென்றான். வழியில் ஆலமரம் ஒன்று இருந்தது. சொக்கப்பன் அதன் நிழலில் படுத்தான் ; நன்றாகத் தூங்கிவிட்டான். பிறகு அவன் நான்கு மணிக்கே எழுந்தான் ; நேரம் தவறியதை உணர்ந்தான் ; பயந்து ஓடினன். எசமானர் சொன்ன நிலயம் பூட்டிக் கிடந்தது. அவன் எசமானரிடம் திரும்பி வந்தான். எசமானர் நடந்ததை உணர்ந்தார். கடுங்கோபம் கொண்டார் ; சொக்கப்பனை வேலையில் இருந்து நீக்கிவிட்டார்.

நீதி : எதனையும் குறித்த காலத்தில் செய்ய வேண்டும்.

9. காகமும் வடையும்

குறிப்புகள் தயாரித்தல் : ஒரு கிழவி வடை விற்றல் - ஒரு காகம் அவள் ஏமாறும் சமயம் பார்த்தல் - ஒரு வடையைக் கௌவிக் கொண்டு போதல்-ஒரு மரக்

கிளை மீது தங்குதல் - அங்கு நரி வருதல் - 'உன் பாட்டு இனிமையாக இருக்கும்-ஒரு பாட்டைப் பாடு' என்று வேண்டுதல் - காகம் வாயைத் திறத்தல் - வடை கீழே விழுதல் - நரி கௌவிக் கொண்டு ஓடுதல்.

கதை கூறுதல் : ஒரு மரத்தடியில் கிழவி ஒருத்தி வடை விற்றுக்கொண்டு இருந்தாள். ஒரு காகம் அவள் ஏமாறும் சமயம் பார்த்து, ஒரு வடையைக் கௌவிக்கொண்டு பறந்தது. அது பறந்து போய் ஒரு மரக் கிளைமீது உட்கார்ந்தது. அப்போழுது ஒரு நரி அந்த வழியே வந்தது. அது காகத்தின் வாயில் வடை இருப்பதைக் கண்டது. உடனே அந்த நரி காகம் இருந்த மரத்தடியில் வந்து நின்றது. அது காகத்தைப் பார்த்து, 'நண்பனே, உன் பாடல் மிகவும் இனிமை யாக இருக்கும் என்று கேள்விப்பட்டேன். தயவு செய்து ஒரு பாட்டுப் பாடு' என்று வேண்டிக்கொண் டது. காகம், நரி தன்னைப் புகழ்வதாக எண்ணிப் பாட வாயைத் திறந்தது. பாவம்! அதன் வாயில் இருந்த வடை கீழே விழுந்தது. நரி அதைக் கௌவிக் கொண்டு ஓடிவிட்டது.

நீதி : பிறர் புகழ்ச்சியில் ஏமாறலாகாது.

10 குழந்தையும் நாயும்

குறிப்புகள் தயாரித்தல் : கடலில் கப்பல் போகிறது - மேல் தட்டில் குழந்தையும் நாயும் விளையாடுதல் - குழந்தை தவறிக் கடலில் விழுதல் - உடனே நாய் கடலில் குதித்தல் - குழந்தையின் சட்டையைக் கௌவுதல் - குழந்தையுடன் நீந்தி வருதல் - ஒருவர் ஏணி வழியாக இறங்கிக் குழந்தையையும் நாயையும்

கப்பலில் ஏற்றுதல் - குழந்தை சிரித்தல் - நாய் வாலை ஆட்டுதல்.

கதை கூறுதல் : ஒரு கப்பல் சென்னைத் துறை முகத்தை விட்டுப் புறப்பட்டது. அதன் மேல் தட்டில் ஒரு நாய் ஒரு குழந்தையோடு விளையாடிக் கொண்டு இருந்தது. குழந்தை மெதுவாக நகர்ந்து நகர்ந்து போய்த் திடீரென்று கடலில் விழுந்து விட்டது. உடனே அங்கு இருந்தவர்கள் அலறினர்கள். குழந்தை விழுந்ததைக் கண்ட நாய் உடனே கடலில் குதித்தது. அது சிறிது நேரத்திற்குள் குழந்தையோடு நீருக்கு மேல் காணப்பட்டது. அது குழந்தையின் சட்டையைக் கௌவிக்கொண்டு நீந்தி வந்தது. அப்பொழுது ஒருவர் கப்பலில் இருந்த ஏணி வழியாக நீர் மட்டத்திற்கு இறங்கினர். நாய் குழந்தையுடன் அவரண்டை வந்தது. அவர் இரண்டையும் தூக்கிக்கொண்டு மேல் தட்டை அடைந்தார். குழந்தை தன் தாயைப் பார்த்துச் சிரித்தது. நாய் வாலை ஆட்டிக்கொண்டு நின்றது.

நீதி : நாயே நல்ல துணை.

11. விறகு வெட்டியும் கோடரியும்

குறிப்புகள் தயாரித்தல் : ஆற்றோரம் - மரம் - முருகன் விறகு வெட்டுதல் - கோடரி கைத்தவறி ஆற்றில் விழுதல் - முருகன் வருத்தம் - தேவதை தோன்றுதல் - பொன் கோடரி காட்டல் - முருகன் அதை மறுத்தல் - வெள்ளிக் கோடரி காட்டல் - முருகன் அதையும் மறுத்தல் - தேவதை இரும்புக் கோடரியைத் தந்து மற்றவற்றையும் முருகனுக்கே தரல்.

கதை கூறுதல் : முருகன் ஒரு விறகு வெட்டி, அவன் ஒரு நாள் காலை ஆற்றோரம் சென்றான். அங்கு ஒரு மரம் இருந்தது. முருகன் அதன்மீது ஏறி விறகு வெட்டினான். அப்பொழுது அவன் பிடித்திருந்த இரும்புக் கோடரி கைத்தவறி ஆற்றில் விழுந்துவிட்டது. ஆறு அதிக ஆழம் உடையது. அதனால் முருகன் கரையில் இருந்து வருத்தப்பட்டான். அப்பொழுது ஒரு தேவதை அவன் முன் தங்கக் கோடரியுடன் தோன்றியது : 'இது உன் கோடரியா ?' என்று கேட்டது. முருகன், 'இல்லை' என்றான். பிறகு அத் தேவதை ஒரு வெள்ளிக் கோடரியைக் காட்டியது. முருகன், 'இதுவும் என்னுடையது அன்று' என்றான். தேவதை அவனுடைய இரும்புக் கோடரியை ஆற்றில் மூழ்கி எடுத்தது, 'நீ உண்மை பேசியதால், இந்த பொன் கோடரியையும் வெள்ளிக் கோடரியையும் நீயே வைத்துக் கொள்' என்று கூறிக் கொடுத்து மறைந்தது.

நீதி : உண்மை உயர்வைத் தரும்.

12 யானையும் தையற்காரனும்

குறிப்புகள் தயாரித்தல் : கோவில் யானை கடைத் தெரு வழியே குளத்துக்குப் போதல் - தையற்காரன் தினமும் யானைக்கு வாழைப்பழம் தருதல் - ஒரு நாள் கடையில் திருட்டு - அன்று காலை வழக்கம் போல் யானை கடைக்குப் போதல் - தையற்காரன் கோபம் - துதிக்கையை ஊசியால் குத்துதல் - யானை குளத்துக்கு போதல் - சேற்று நீரைத் துதிக்கையில் கொண்டு வருதல் - அதனைக் கடையில் வீசி அடித்

தல் - புதிய துணிகள் பாழாதல் - கடைக்காரன் வருத்தம்.

கதை கூறுதல் : ஓர் ஊரில் கோவில் யானை ஒன்று இருந்தது. அது தினந்தோறும் கடைத் தெரு வழியே குளத்திற்கு நீராடச் செல்லுதல் வழக்கம். ஒரு தையற்காரன் அந்த யானைக்குத் தினந்தோறும் வாழைப் பழங்கள் தருதல் வழக்கம். ஒரு நாள் இரவு அவன் கடையில் திருட்டு நடந்தது. பல துணிகள் களவு போய்விட்டன. மறுநாள் காலை தையற்காரன் வருத்தத்துடன் கடையில் உட்கார்ந்து இருந்தான். அப்பொழுது யானை வழக்கம் போல அங்கு வந்தது. அது கடைக்காரனிடம் தன் துதிக்கையை நீட்டியது. தையற்காரனுக்குக் கோபம் பொங்கியது. உடனே அவன் தன் கையில் வைத்திருந்த ஊசியை யானையின் துதிக்கையில் குத்தினான். யானை உடனே குளத்திற்குப் போனது. அது குளித்த பிறகு சேற்று நீரைத் தன் துதிக்கையில் நிரப்பிக்கொண்டது. நேரே கடைக்கு வந்தது. அப்பொழுது தையற்காரன் புதிய துணிகளை விரித்துப் போட்டு வெட்டிக்கொண்டு இருந்தான். அந்த சமயம் யானை சேற்று நீரைக் கடை முழுவதும் கொட்டித் துணிகளைப் பாழாக்கிவிட்டுப் போய்விட்டது. கடைக்காரன் தன் தவற்றை எண்ணி வருந்தினான்.

நீதி : யானையிடம் குறும்பு செய்யலாகாது.

II. நிகழ்ச்சிகளைக் கூறப் பழகுதல்.*

1. தீபாவளி

குறிப்புகள் தயாரித்தல் : தீபாவளியன்று-கோபாலனும் தங்கை கோமளமும்—சீன வெடிகள் கொளுத்தல் - பெரிய பட்டாசு-கோமளம் எறிதல்-வீடு தீப்பிடித்தல்-நல்ல காற்று-வீடு சாம்பல் ஆதல்-பிள்ளைகள் கற்ற பாடம்.

நிகழ்ச்சி கூறுதல் : கோபாலன் தங்கை கோமளம், இருவரும் தீபாவளியன்று சீன வெடிகளை வாங்கினார்கள் ; அவற்றைக் கொளுத்தி விளையாடிக் கொண்டு இருந்தார்கள். கோமளம் ஒரு பெரிய பட்டாசைக் கொளுத்தி மேலே எறிந்தாள். அது கூரை மீது பட்டது. உடனே அந்த ஓலைக் கூரை தீப் பிடித்துக்கொண்டது. அப்பொழுது நல்ல காற்று அடித்தது. அதனால் வீடு நன்றாக எரிந்து சாம்பல் ஆய்விட்டது. அன்று முதல் அப்பிள்ளைகள் சீன வெடிகளை வாங்குவதில்லை.

2. மழைமீது கோபமா ?

குறிப்புகள் தயாரித்தல் : நாராயணன் நான்காம் வகுப்பு மாணவன் - அவன் மாலையில் நொண்டி விளையாட விரும்புதல்-ஆனால் மாலையில் திடீரென மழை வருதல் - அவன் மழைமீது கோபப்படல் - தாயார்

---

*இவை மாதிரி நிகழ்ச்சிகள், இவை போலப் பலவற்றையும் கூறப் பழக்குதல் வேண்டும்.

அவனுக்கு மழையின் அவசியத்தைக் கூறுதல்—நாரா யணன் வெட்கித் தலைகுனிதல்.

நிகழ்ச்சி கூறுதல் : நாராயணன் நான்காம் வகுப்பு மாணவன். அவன் ஒரு நாள் மாலையில் 'நொண்டி ஆட்டம்' ஆட விரும்பினான். ஆனால் அன்று மாலை திடீரென மழை வந்துவிட்டது. நாரா யணன் வீட்டைவிட்டு வெளிச்செல்ல முடியவில்லை. அதனால் அவன் தனக்குள், 'இந்த மழை என் விளை யாட்டைக் கெடுத்துவிட்டது' என்றான். அவன் தாயார் அதனைக் கேட்டார். அவர் அவனை அழைத்து, 'மகனே, இந்த மழைதான் பயிரை வளர்ப்பது; நம்மை வளர்ப்பது; கால் நடைகளை வளர்ப்பது. இது பெய்யாவிடில் நாம் இறந்துபோவோம். உன் விளை யாட்டைக் கெடுத்தது என்று மழைமீது கோபப் படாதே!' என்றார். நாராயணன் வெட்கித் தலை குனிந்தான்.

3. சாரணச் சிறுவன்—சரவணன்

குறிப்புகள் தயாரித்தல் : சரவணன் ஒரு சார ணச் சிறுவன் - அவன் எட்டாம் வகுப்பு மாணவன்- என் பெயர் சுந்தரன் - நான்காம் வகுப்பு - இருவரும் குளத்தில் குளித்தல் - நான் நீந்த முயன்று மூழ்கு தல் - சரவணன் குதித்து என்னைக் காத்தல் - நான் நீந்தக் கற்றல்.

நிகழ்ச்சி கூறுதல் : என் பெயர் சுந்தரன். நான் நான்காம் வகுப்பு மாணவன். சரவணன் எனது நண் பன். அவன் எட்டாம் வகுப்பு மாணவன். மேலும் அவன் சாரணச் சிறுவன். ஒரு நாள் நாங்கள் இருவ

ரும் குளத்தில் குளிக்கப் போனும். சரவணன் குளத்தில் நீந்திக்கொண்டு இருந்தான். எனக்கு நீந்தத்தெரியாது. நான் அவனைப் பார்த்துக்கொண்டே நீரில் இறங்கினேன். காலைப் படிமீது வைக்கத் தவறினேன்; தண்ணீரில் மூழ்கினேன். பிறகு என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. சரவணன், 'நீ மூழ்கியதைக் கண்டதும் நான் நீந்தி வந்தேன்; தண்ணீரில் மூழ்கி உன்னைத் தூக்கினேன்; சிறிது நேரம் கழிந்திருந்தால் நீ இறந்து இருப்பாய்' என்முன். நான் அன்று முதல் முயன்று நீந்தக் கற்றுக்கொண்டேன்.

4. கடைக்கு எதிரில் சண்டை

குறிப்புகள் தயாரித்தல் : நான் பள்ளிக்குப் போகும் வழி - வெற்றிலை பாக்குக் கடை - கடைக்காரன் வாங்க வந்தவன் - வாய்ச்சண்டை - கைச்சண்டை. - சோடா புட்டிகள் பறத்தல் - பெருங் கூட்டம் - போலீசார் தலையிடுதல்.

நிகழ்ச்சி கூறுதல் : நான் நான்காம் வகுப்பு மாணவி. என் பெயர் வள்ளியம்மை. நான் நேற்றுக் காலையில் கடைத்தெரு வழியே பள்ளிக்குச் சென்றேன். ஒரு வெற்றிலை - பாக்குக் கடைக்கு முன் பெருங் கூட்டம் கூடி இருந்தது. சோடா புட்டிகள் பறந்தன. ஒரு குடியன் கடைக்காரனை வைது அடித்தானும். கடைக்காரன் கீழே இறங்கிக் குடியனை அடித்தானும். பிறகு இருவரும் சோடா புட்டிகளால் அடித்துக் கொண்டனர். கூட்டத்தில் இருந்த சிலர்க்கும் காயம் பட்டது. நல்ல வேளை! நான் போன சமயம் போலீஸார் வந்து விட்டனர். அவர்கள் கூட்-

டத்துள் நுழைந்து, சண்டையிட்ட இருவரையும் பிடித்துச் சென்றனர்.

5. திருமலை-திருடன் ஆனான்

குறிப்புகள் தயாரித்தல்: சுந்தரி நான்காம் வகுப்பு மாணவி - பிச்சைக்காரன் திருமலை - சுந்தரி இரக்கம்- திண்ணையில் இருக்க இடம் - ஓர் இரவு சுந்தரி தகப்பனுருடன் திண்ணையில் படுத்தல் - திருமலை திருட்டு எண்ணம் - இருளில் வருதல் - பொன் சங்கிலி அகப் படல் - எல்லோரும் அவனை அடித்தல் - போலீசாரி டம் ஒப்படைத்தல்.

நிகழ்ச்சி கூறுதல்: சுந்தரி நான்காம் வகுப்பு மாணவி. அவள் இருந்த தெருவில் ஒரு பிச்சைக் காரன் இருந்தான். சுந்தரி அவன்மீது இரக்கம் கொண்டாள்; அவனுக்குத் திண்ணையில் இருக்க இடம் தந்தாள்; அவனுக்குத் தினமும் சோறு உதவி வந்தாள். ஓர் இரவு சுந்தரி தன் தகப்பனுருடன் திண் ணையில் படுத்துக்கொண்டாள். சுந்தரி கழுத்தில் பொன் சங்கிலி இருந்தது. திருமலை அதைத் திருடச் சமயம் பார்த்திருந்தான். அவன் அந்த இரவு பன்னி ரண்டு மணிக்கு எழுந்தான்; மெதுவாக நகர்ந்து சென்றுன்; சுந்தரியின் கழுத்தில் கை வைத்தான். சுந்தரி திடீரென விழித்துக்கொண்டு அலறினுள். உடனே தகப்பனுர் திருமலையைப் பிடித்துக்கொண் டார். சுந்தரி போட்ட கூச்சலைக் கேட்டு எழுந்த பல ரும் அங்கு வந்தனர். திருமலையை நன்ருக அடித்துப் போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

6. நடராசன் நடிப்பு

குறிப்புகள் தயாரித்தல்: நடராஜன் நான்காம் வகுப்பு மாணவன் - அவன் படிக்கும் நாடகப் பகுதி களைத் தானாகவே நடித்தல் - ஒரு நாள் கோபக்காட்சி நடித்தல் - தாயார் ஓடிவந்து பார்த்தல் - நடராஜன் வெட்கம் - தாயார் விஷயம் அறிந்து மகிழ்தல்.

நிகழ்ச்சி கூறுதல்: நடராஜன் நான்காம் வகுப்பு மாணவன். அவன் நாடகக் காட்சிகளை படிப்பது வழக்கம்; படித்தவற்றைத் தானாகவே வீட்டிற்குள் நடிப்பதும் வழக்கம். ஒரு நாள் அவன் நாடகப் பகுதி யை நடித்துக்கொண்டு இந்தான். அதில் கோபமாகப் பேசும் பாகம் வந்தது. நாராயணன் தன்னையும் வீட் டையும் மறந்தான்; 'அவனைப் பிடி ; வெட்டு ; குத்து' என்று உறத்துக் கத்தினான். சமையல் அறையில் இருந்த அவன் தாயார் காதில் இச்சொற்கள் பட்டன. அவர், 'என்ன விபரீதமோ!' என்று எண்ணிப் பயந்து ஓடிவந்தார். தன் தாயாரைக் கண்டதும் நடராசன் விஷயத்தை உணர்ந்து வெட்கப்பட்டான்; தான் நாடகம் நடிப்பதாகத் தாயாரிடம் கூறினான். அது கேட்ட தாயார், 'அப்பா, அது நல்ல பழக்கமே. ஆனால் என்னிடம் சொல்லிவிட்டு நடிப்பது நல்லது' என்று கூறிச் சென்றார்.

எழுதும் பயிற்சி

III. கடிதம் எழுதுதல்

ஆசிரியர்க்கு எழுதுதல்

1

சமயபுரம்,
10—7—'42.

ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்,

ஐயா, இன்று காலை என் மாமன் வெளி ஊரிலிருந்து வந்திருக்கிறார். அவர் இன்று மாலையே ஊருக்குப் போவார். ஆதலால், அவருக்கு வேண்டிய சிறு வேலைகளைச் செய்ய நான் வீட்டில் இருக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார். என் பெற்றோரும் அதனை விரும்புகின்றனர். ஆதலால், தயவு செய்து இன்று மட்டும் எனக்கு விடுமுறை கொடுக்க வேண்டுகிறேன்.

இங்ஙனம் :
தங்கள் பணிவுள்ள மாணவன்,
தி. சு. கஜராஜன்.

திருவாளர்,
நான்காம் வகுப்பு ஆசிரியர் அவர்களுக்கு,
ஆரம்ப பாடசாலை,
சமயபுரம்.

2

நிலக்கோட்டை,
10—8—'42.

ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

ஐயா, நான் நேற்று மாலை முதல் கடுமையான தலைவலியாலும் காய்ச்சலாலும் வருந்திக்கொண்டு இருக்கிறேன். இப்பொழுது நான் பள்ளிக்கூடம் வரமுடியாமல் வருந்துகிறேன். ஆதலால், தயவு செய்து எனக்கு இரண்டு நாட்கள் விடுமுறை தர வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
தங்கள் பணிவுள்ள மாணவி,
கோகிலம்.

நான்காம் வகுப்பு ஆசிரியர் அவர்களுக்கு,
முனிசிபல் பாடசாலை,
நிலக்கோட்டை.

தகப்பனுருக்குக் கடிதம்

1

150, தங்கசாலைத் தெரு,
ஜார்ஜ் டவுன்,
சென்னை,
15—10—'42.

அன்புள்ள அப்பா அவர்களுக்கு வணக்கம்.

நான் இங்கு மாமாவிடம் சுகமாக இருக்கிறேன். நான் தினந்தோறும் தாங்கள் சொல்லியபடியே

படித்து வருகிறேன். நான் என் வகுப்பில் நடந்த கால் வருஷத் தேர்வில் முதல்வனாகத் தேறி இருக்கிறேன். இது உங்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டும் அல்லவா? இதனைத் தாயாருக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

இங்ஙனம் :
தங்கள் அன்புள்ள மகன்,
சு. நக்கீரன்.

திருவாளர்,
க. சுந்தரேச முதலியார் அவர்கள்,
செம்பாக்கம் போஸ்ட்,
செங்கற்பட்டு ஜில்லா.

2

செம்மங்குடி,
25—10—'42.

அன்புள்ள அப்பா அவர்களுக்கு வணக்கம்.

இன்று காலை நீங்கள் சென்னை சென்ற போது நான் தூங்கிக்கொண்டு இருந்தேன். ஆதலால், நான் ஒன்றும் உங்களிடம் சொல்லி அனுப்ப முடியவில்லை. எனக்கு 60 பக்கம் நோட்டுப் புத்தகங்கள் 6 வாங்கி வர வேண்டுகிறேன். பணம் இருந்தால் எனக்கு ஒரு சைக்கிலும் வாங்கி வர வேண்டுகிறேன்.

இங்ஙனம் :
தங்கள் அன்புள்ள மகன்,
மு. இளங்கோ.

திருவாளர்,
கா. முருகேச நாயகர் அவர்கள்,
60, பிராட்வே,
சென்னை.

நண்பர்களுக்கு எழுதும் கடிதம்

1

10, கிழக்கு ராஜவீதி.
தஞ்சாவூர்,
10—4—'42.

என் அன்புள்ள கண்ணகி,

நலம், உனது நலம் அறிய ஆசைப்படுகிறேன். என் பள்ளிக்கூடம் இந்த மாதம் 20-ஆந் தேதி முதல் கோடை விடுமுறைக்காக மூடப்படும். நான் வெளிச் செல்ல விரும்பவில்லை. பட்டிணத்தில் உள்ள நீ இங்கு வரலாம்; என்னுடன் ஒரு மாதம் தங்கி இருக்கலாம்.

இங்கு (நாம் சரித்திரத்தில் படித்துள்ள) இராஜ ராஜ சோழன் கட்டிய பெரிய சிவன் கோவில் இருக்கிறது. மஹாராஷ்டிர அரசர்கள் கட்டிய அழகு மிக்க அரண்மனை இருக்கிறது. கோட்டை, கொத்தளங்கள் இருக்கின்றன. தஞ்சாவூருக்கு அருகில் திருவையாறு முதலிய சிறந்த சிவத்தலங்கள் இருக்கின்றன. நீ இங்கு வந்தால், இவை அனைத்தையும் கண்டு மகிழலாம். நீ வரத் தவருதே.

இங்ஙனம் :
உன் அன்புள்ள சிநேகிதி,
அன்னக்கிளி.

திரு. மா. கண்ணகி,
4-ஆம் வகுப்பு மாணவி,
நகரசபைப் பெண் பாடசாலை,
மயிலாப்பூர், சென்னை.

2

25, பிராட்வே,
சென்னை.
15—10—'42.

அன்புள்ள கண்ணு,

நாளை மாலை 6 மணிக்கு எங்கள் வீட்டில் திருவாட்டி - மணிமேகலை அம்மையார், 'காரைக்கால் அம்மையார் புராணம்' பிரசங்கம் செய்யப் போகிறார்கள். நீ அதைக் கேட்க முன்பே ஆசை கொண்டாய் அல்லவா? ஆதலால், தவறாமல் வா. நான் உன் வரவை ஆவலோடு எதிர்பார்ப்பேன்.

இங்ஙனம்;
உன் அன்புக்குரிய நண்பன்,
சு. வடிவேலன்

திரு. சு. கண்ணபிரான்,
4–ஆம் வகுப்பு மாணவர்,
இராமகிருஷ்ணர் பாடசாலை,
தியாகராயநகர், சென்னை.

வியாபாரக் கடிதம்

1

10, மலைவீதி,
தஞ்சாவூர், 30—7—42.

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி.
மானேஜர் அவர்களுக்கு,

ஐயா,

கீழ்க் குறிப்பிட்ட புத்தகங்களை எனது முகவரிக்கு (விலாசத்திற்கு) உடனே ரயில்வே-பார்சலில் அனுப்பும்படி வேண்டுகிறேன்.

1. சன்மார்க்க தீபம் முதல் பாகம் 12 பிரதிகள்
2. சன்மார்க்க தீபம் இரண்டாம் பாகம்
12 பிரதிகள்
3. பொற்கால வாசகம் முதல் புத்தகம்
12 பிரதிகள்
4. பொற்கால வாசகம் இரண்டாம் புத்தகம்
12 பிரதிகள்.

இங்ஙனம் :
தங்கள் உண்மையுள்ள,
கு. இராஜ ராஜன்.

மானேஜர் அவர்கள்,
கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி,
150, பிராட்வே, சென்னை.

காரியக் கடிதம்

நகரசபைப் பாடசாலை,
திருவல்லிக்கேணி;
சென்னை, 15—4—'42.

'தினமணி' ஆசிரியர் அவர்களுக்கு,
மவுண்ட்ரோட், சென்னை.

ஐயா,

இதனுடன் அனுப்பியுள்ள எங்கள் மாணவர் தமிழ்க் கழக அழைப்பு இதழைத் தங்கள் பத்திரிகையில் இன்றே வெளிப்படுத்தும்படி வேண்டுகிறேன்.

இங்ஙனம் ;
தங்கள் உண்மையுள்ள,
ப. சுந்தர பாண்டியன்.
மாணவர் தமிழ்க் கழகக் காரியதரிசி.

பயிற்சி

1. வயிற்றுவலி காரணமாக ஒரு நாளைக்கு விடுமுறை வேண்டி உன் ஆசிரியர்க்கு ஒரு கடிதம் எழுது.

2. உன் தம்பி, தங்கையரின் காது குத்தலை முன்னிட்டு ஒரு நாள் விடுமுறை வேண்டி உன் ஆசிரியர்க்கு ஒரு கடிதம் எழுது.

3. ஒரு கதைப் புத்தகம் இரவலாக அனுப்பும்படி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

4. உன் கிரகப் பிரவேச விருந்திற்கு வரும்படி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

5. நவராத்திரி விழா உன் ஊரில் எப்படி நடந்தது என்பதை விளக்கி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

6. உன் பள்ளியில் நடந்த சரஸ்வதி பூசையைப் பற்றி விளக்கி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

7. நீ கொண்டாடிய தீபாவளியைப் பற்றி உன் இறித்தவ நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

8. நீ கொண்டாடிய பொங்கல் விழாவைப்பற்றி உன் முஸ்லிம் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

9. உன் ஊரின் சிறப்பை விளக்கி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

10. உன் பள்ளிக்கூடத்தைப் பற்றி விளக்கி உன் தகப்பனுருக்கு ஒரு கடிதம் எழுது.

11, உன் பள்ளிக்கூட நாடகம் பற்றி உன் தந்தைக்கு ஒரு கடிதம் எழுது.

12. உன் பள்ளிக்கூடப் பந்தய விளையாட்டைப் பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

IV. நிகழ்ச்சிகளைப் பற்றி எழுதுதல்

1. பொய் சொன்ன பொன்னப்பன்

[கருத்து முடிந்து நிற்கும் சொற்றொடர் வாக்கியம் ஆகும். ஒரே கருத்தைப் பற்றிய பல வாக்கியங்கள் கொண்டது ஒரு பாரா ஆகும். ஒரு நிகழ்ச்சியில்-ஒரு கதையில்-ஒரு பாடத்தில் பல பாராக்கள் இருக்கும்.]

நான் நான்காம் வகுப்பு மாணவன். என் பெயர் **பொன்னப்பன்.** நான் ஒரு நாள் முகம் பார்க்க கண்ணுடியைக் கைத்தவற விட்டேன். அது கீழே விழுந்து உடைந்து விட்டது. நான் உடனே வெளியில் ஓடிவிட்டேன்; சிறிது நேரம் கழித்து வீடு திரும்பினேன்.

என் தாயார் கண்ணுடியைப் பற்றி என்னை விசாரித்தார். நான், 'நான் உடைக்கவில்லை' என்று பொய் சொன்னேன். அவ்வளவே! என் தாயார் முகம் வெளுத்தது. அவர் கண்களில் இருந்து நீர்த் துளிகள் துளித்தன. அவர் என்னைப் பார்த்து, 'பொன்னப்பா, பொய் சொல்லத் துணிந்தாயா?' என்றார்.

அவர் வருத்தத்தோடு கேட்டது என்னால் பொறுக்க முடியவில்லை. என் உடம்பு நடுங்கிற்று. என் கண்கள் நீரைச் சொரிந்தன. நான் அழுது கொண்டே, 'அம்மா! நான்தான் கண்ணுடியைக் கைத்தவற விட்டேன். உங்களுக்குப் பயந்தே பொய் பேசினேன். அம்மா! நான் இனி ஒருபோதும் பொய்

சொல்லமாட்டேன்' என்றேன். என் அருமைத் தாயார் என்னை அணைத்து முத்தம் இட்டார்.

---

2. மோட்டார் விபத்து

என் பெயர் அருணசலம். நான் நான்காம் வகுப்பில் வாசிக்கிறேன். ஒரு நாள் நானும் என் வகுப்பில் படிக்கிற கோபாலனும் பள்ளிக்கூடம் விட்டு வீட்டிற்கு வந்து கொண்டு இருந்தோம்.

வழியில் ஒரு மோட்டார் எங்கள் பின்புறம் வேகமாக வந்துகொண்டு இருந்தது. நாங்கள் பேசிக்கொண்டு வந்ததால், மோட்டார் வருவதைக் கவனிக்க வில்லை; மோட்டார் ஓட்டி செய்த ஓசையையும் கேட்கவில்லை.

வண்டி ஓட்டி திறமை உடையவன். ஆதலால் அவன் எங்கள் பின்புறத்தில் திடீரென்று வண்டியை நிறுத்திவிட்டான். வண்டி நின்றபோது உண்டான ஓசையைக் கேட்டு நாங்கள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தோம். அப்போழுதுதான் நாங்கள் நடுத் தெருவில் நடந்து வந்தது தவறு என்பதை உணர்ந்தோம்.

வண்டிக்குள் இருந்தவர் பெரிய மனிதர். அவர் எங்களை அழைத்து, 'நீங்கள் நடுத் தெருவில் நடக்கலாமா? இப்படி நடப்பது எவ்வளவு ஆபத்தானது என்பதை இப்பொழுதேனும் அறிந்தீர்களா? தெருவின் இடப்புற ஓரமாகச் செல்லுங்கள்' என்றார்.

நாங்கள் அன்று முதல் அவர் சொன்னபடியே நடந்து வருகிறோம்.

---

3. பழைய சிப்பாய்.

என் பெயர் வரதன். நான் குட்டிச் சாரணர் இயக்கத்தில் சேர்ந்திருக்கிறேன். ஒரு நாள் காலை நானும் ஏழாம் வகுப்பில் வாசிக்கின்ற ஏகாம்பரமும் தெரு வழியே வந்துகொண்டு இருந்தோம். எங்களுக்கு முன் ஒரு பெரியவர் தண்ணீர்த் தவலையைத் தோள்மீது சுமந்து போய்க்கொண்டு இருந்தார்.

ஏகாம்பரம் உடற்பயிற்சியைப்பற்றி என்னிடம் சொல்லிக்கொண்டு வந்தான். நாங்கள் பேசிக் கொண்டே பெரியவரை நெருங்கி விட்டோம். அந்தச் சமயத்தில் ஏகாம்பரம் என்னைப் பார்த்து, 'நிமிர்ந்து நில்' என்றான்.

அவ்வளவே ! உடனே சிப்பாய் தூக்கிச் சென்ற தண்ணீர்த் தவலை ஏகாம்பரத்தின் தலைமீது விழுந்தது. அவன் முற்றிலும் நனைந்துவிட்டான். தலையில் காயம் பட்டது. பெரியவரோ அசையாது நிமிர்ந்து நின்று கொண்டு இருந்தார்.

உடனே தெருவில் கூட்டம் கூடிவிட்டது. நான் நடந்ததைக் கூறினேன். ஒருவர், ' இவர் சிப்பாயாக இருந்தவர். ' நிமிர்ந்து நில் ' என்றதும் இவருக்குப் பழைய நினைவு வந்துவிட்டது போலும் ! ' என்றார். அதைக் கேட்டு எல்லோரும் நகைத்தார்கள். சிப்பாய் விஷயத்தை உணர்ந்தார் ; வெட்கத்தால் தலை குனிந்தார்.

---

4. தீ விபத்து

நான் நான்காம் வகுப்பு மாணவி. என் பெயர் கோமளம். நான் படிக்கும் நேரம் போக, எஞ்சிய நேரத்தில் வீட்டு வேலைகளைச் செய்வேன். ஒரு நாள் என் தாயார் என்னை அடுப்புப் பற்ற வைக்கச் சொன்னார்.

நான் எருமுட்டையில் சிறிது மண்ணெண்ணெயை ஊற்றிப் புகை விளக்கில் பற்றவைத்தேன். தீ அதிகம் பிடித்துக் கொண்டது. நான் அதைக் கண்டு பயந்து எருமுட்டையைப் போட்டுவிட்டேன். அது என் காலடியிலேயே வீழ்ந்ததால், என் பாவாடையில் தீப் பிடித்துக்கொண்டது. நான் 'அம்மா, ஐயோ! என்று அலறினேன்.

உடனே என் தாயார் ஓடி வந்தார்; ஒரு முரட்டுத் துணியால் என் பாவாடையை மூடி, என் கால்களை இறுகப் பிடித்துக் கொண்டார். என்ன ஆச்சரியம்! தீ அவிந்து விட்டது. நான் உயிர் தப்பினேன். ஆனால் என் முழங்காலில் சில சிறு கொப்பளங்கள் உண்டாயின. அவை சில நாட்களில் ஆறிவிட்டன.

---

5. எனது மதுரைப் பிரயாணம்

நான் நான்காம் வகுப்பு மாணவன். என் பெயர் இளங்கோ. நான் சென்ற நவராத்திரி விடு முறையில் மதுரை சென்றேன். அங்கு என் மாமா இருக்கிறார். அவர் மதுரையில் பார்க்கத் தக்க வற்றை எல்லாம் எனக்கு காட்டினார்.

மதுரை மீனுக்ஷி அம்மன் கோவில் பார்க்க தக்க அழகு உடையது. ஆயிரக்கால் மண்டபம், பொற்ருமரைக் குளம், வெள்ளிக் கூரை அமைந்த சந்நிதி முதலியவை கோவிலுக்குள் இருக்கின்றன. கோபுரங்கள் ஆகாயம் அளாவி நிற்கின்றன.

திருமலே நாயக்கர் மஹால் அழகான கட்டிடம். அதில் உள்ள தூண்கள் இரண்டு கைகளாலும் அணைக்க முடியாதவை. இராணி மங்கம்மாள் கட்டிய சத்திரம் இருக்கிறது. பெரிய கடைத்தெரு காட்சிக்கு இனிமையாக இருக்கிறது. பல பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன. நூல் நூற்கும் பெரிய ஆலே ஒன்று இருக்கிறது.

மதுரையில் வைகை ஆறு ஓடுகிறது. அதன் சிறப்புத் தமிழ் நூல்களில் கூறப்பட்டு இருக்கிறதாம். 'மதுரை பாண்டியர் தலேநகரமாக இருந்தது; பிறகு நாயக்கர் தலேநகரமாக இருந்தது' என்று சரித்திரம் கூறுகிறது.

---

6. நவராத்திரியில் நடந்த நிகழ்ச்சி

என் பெயர் சகுந்தலே. என் தோழி பெயர் மணிமேகலே. நாங்கள் இருவரும் நானகாம் வகுப்பில் வாசிக்கிருேம். எங்கள் வீட்டில் நவராத்திரிக் கொலு வைத்திருந்தோம்.

ஒரு நாள் மணிமேகலே கொலுவைப் பார்க்க வந்தாள். அவள் போகும் பொழுது எங்கள் நாய் மீது

கல் எறிந்துவிட்டு போனுள. நான்பக்கத்தில் இருந்த தால் நாய் குரைக்காமல் இருந்தது.

மறுநாள் மாலே மணிமேகலே எங்கள் வீட்டிற்கு வந்தாள். நான் அப்பொழுது கொலுவண்டை இருந் தேன். சகுந்தலா, 'ஐயோ, நாய் கடிக்கிறதே!' என்று அலறிஞள். நான் வெளியே ஓடி வந்தேன். நாய் அவள் பாவாடையைக் கிழித்து விட்டது ; அவள் கணுக்காலில் நகங்கள் பதிந்திருந்தன. அவள் என் ஜேப் பார்த்து அழுதாள்.

நாய் என்னேக் கண்டதும் ஓடிவிட்டது. நான் அவளே உள்ளே அழைத்துப் போய், என் பாவாடை யைத் தந்தேன். அவள் அதனேக் கட்டிக்கொண்டாள். அவள் அன்று முதல் எந்த விலங்கினிடமும் விஷமம் செய்வதே இல்லே.

---

7. வீட்டைக் காத்த பூனே

நான் நான்காம் வகுப்பு மாணவன். என் பெயர் **கண்ணப்பன்.** நான் ஒரு வெள்ளேப் பூனேயை வளர்த்து வருகிறேன். அது என்மீது மிக்க அன்பு உடையது.

நாங்கள் இருக்கின்ற வீடு ஓலேக் கூரை உடை யது. ஓர் இரவு நாங்கள் காற்றுக்காக வெளியில் படுத்து இருந்தோம். பூனே எலிகளேப் பிடிக்க வீட் டிற்கு உள்ளே இருந்தது.

நான் நன்ருகத் தூங்கிக்கொண்டு இருந்தேன். நடு இரவில் பூனே என் கால்களைக் கீறிக் கத்தியது. நான் எழுந்து பார்த்தேன். அது கத்திக்கொண்டே வீட்டின் பின்புறம் ஓடியது. நான் எழுந்து பின்புறம் பார்த்தேன் ; வீட்டுப் பின்புறம் புகைவதைக் கண்டேன் ; உடனே 'அப்பா, அப்பா' என்று கூவினேன்.

என் பெற்ருேர் எழுந்து பார்த்தனர். வீட்டிற்குள் சிறியதாக ஏற்றி வைத்த விளக்குத் தள்ளப்பட்டு, பக்கத்தில் கிடந்த துணி ஒன்றில் தீப்பிடித்துக்கொண்டது. அத் தீப்புகையே பின்புறம் தெரிந்தது. என் தகப்பஞர் அத்தீயை அணைத்துவிட்டார்.

பூனே என்னை எழுப்பி இராவிட்டால் எங்கள் வீடு அன்று இரவு சாம்பலாகி இருக்கும் அல்லவா ?

---

8. பந்தய விளையாட்டுகள்

இந்த மாதம் 15-ந்தேதி எங்கள் பள்ளிக்கூடப் பந்தய விளையாட்டு நடைபெற்றன. எங்கள் பள்ளிக்கூடத்தில் முதல் ஐந்து வகுப்புகளே இருக்கின்றன. ஆதலால் நூறு அடி தூரம் ஓடுதல், கணக்குப் போட்டு ஓடுதல், கரண்டியில் எலுமிச்சம் பழத்தை ஏந்திக் கொண்டு ஓடுதல், பக்கோடா-காரப்பூந்தி இவற்றைத் தின்றுவிட்டு ஓடுதல், மெழுகு வர்த்தியைக் கையில் (அணையாமல்) பிடித்துக்கொண்டு ஓடுதல், சிறிய கோணிக்குள் காலே விட்டுக்கொண்டு ஓடுதல்போன்ற விளையாட்டுகள் பந்தய முறையில் நடைபெற்றன.

விளையாட்டு மைதானம் பெரியது. அதன் ஓரமாகப் பிள்ளைகள் உட்கார்ந்து விளையாட்டுகளை ஊக்கத்துடன் கவனித்தார்கள். விளையாட்டுகள் மாலை 3 மணிக்குத் தொடங்கப்பட்டன. எங்கள் நான்காம் வகுப்புப் பிள்ளைகள் ஐந்து போட்டிகளில் முதல் பரிசு பெற்றார்கள். எங்கள் வகுப்புப் பிள்ளைகள் முதலில் வெற்றி பெற்றதும் நாங்கள் மகிழ்ச்சியால் கை தட்டினோம். ஆட்டங்கள் 5 மணிக்கு முடிவுற்றன. தலைமை ஆசிரியர், வெற்றி பெற்ற பிள்ளைகளுக்குப் பரிசு கொடுத்தார். நானும் ஓட்டப் பந்தயத்தில் ஒரு கத்தியைப் பரிசாகப் பெற்றேன்.

—

9. தனபாலனும் தவளைகளும்

தனபாலன் என்னுடன் நான்காம் வகுப்பில் வாசிக்கிறான். அவன் நாய், பூனை, தவளை முதலியவற்றின்மீது கல் எறியும் பழக்கம் உடையவன். நான் பலமுறை புத்தி சொல்லியும் அவன் கேட்கவில்லை.

எங்கள் பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்தில் ஒரு குளம் இருக்கிறது. ஒரு நாள் மாலை நானும் தனபாலனும் அதன் கரைமீது உட்கார்ந்து பேசிக்கொண்டு இருந்தோம். தனபாலன் திடீரென்று 'ஆ! தவளைகள்' என்று கூறிக்கொண்டே எழுந்தான்; சில கற்களைப் பொறுக்கித் தான் கண்ட தவளைகள்மீது எறிந்து கொண்டு இருந்தான்.

அச் சந்தர்ப்பத்தில் ஒரு பெரியவர் அங்கு வந்தார். அவர் தனபாலன் சேஷ்டையைக் கவனித்தார். ஒரு சிறிய கல்லை எடுத்தார் ; தனபாலன்மீது விட்டெறிந்தார். அக்கல் தனபாலன் தலைமீது பட்டது. அவன், 'அப்பாடா!' என்று கூவித் தலையைப் பிடித்துக் கொண்டு அழுதான்.

பெரியவர் அவனைப் பார்த்து, 'தம்பீ, உனக்கு வலிப்பது போலவே தவளைகளுக்கும் வலி உண்டாகும் என்பதை இப்பொழுதாவது தெரிந்துகொள்' என்று சொல்லிப் போய்விட்டார். தனபாலன் அன்று முதல் கல் எடுப்பதையே மறந்துவிட்டான்.

---

10. எனது புகைவண்டிப் பிரயாணம்

என் பெயர் தமிழ் அரசி. நான் நான்காம் வகுப்பு மாணவி. நான் சென்ற கிறிஸ்மஸ் விடுமுறையில் என் தகப்பனுருடன் சிதம்பரம் சென்றேன். நான் சென்னையில் எழும்பூர்ப் புகைவண்டி நிலையத்தில் வண்டி ஏறினேன். காலை 7-30 மணி இருக்கும். வண்டி புறப்பட்டது. மாலை 1-30 மணிக்குச் சிதம்பரம் சென்றது.

வண்டி போகும்பொழுது இரண்டு பக்கங்களிலும் உள்ள மரங்கள் முதலியன வண்டிக்கு எதிர்ப் பக்கம் போவதாகத் தெரிந்தன. எங்கும் பசுமையான வயல்கள் காணப்பட்டன ; மலைப் பாறைகள் அங்கங்கு இருந்தன. பல கிராமங்கள், கிராமக் குளங்கள், வைக்கோல் போர்கள், கோபுரம் கொண்ட கோயில்கள் முதலியன காட்சி கொடுத்தன.

செங்கற்பட்டு, விழுப்புரம் ஆகிய இரண்டு இடங்களிலும் பெரிய புகைவண்டி நிலையங்கள் இருக்கின்றன. அங்குப் பல பக்கங்களில் இருந்து வண்டித் தொடர்கள் வந்து சந்திக்கின்றன. அங்குச் சிற்றுண்டிச்சாலை இருக்கின்றது. அங்கு நானும் தகப்பனும் சிற்றுண்டி சாப்பிட்டோம்.

எங்கள் பாதையில் அச்சிறுபாக்கம், திண்டிவனம், மயிலம், திருப்பாதிரிப்புலியூர், சிதம்பரம் முதலியன சிறந்த க்ஷேத்திரங்கள் என்று தகப்பனர் கூறினர்.

---

11 வழியைக் கடந்த வரதன்

வரதன் நான்காம் வகுப்பு மாணவன். நானும் அவனுடன் படிக்கிறேன். என் பெயர் **முருகன்.** ஒரு நாள் நாங்கள் இருவரும் ஒரு பாதை ஓரம் நடந்து வந்தோம்.

அப்பொழுது ஒரு மோட்டார் எங்கள் எதிரில் வந்துகொண்டு இந்தது. அதைக் கண்ட வரதன், 'அது வருமுன் நான் பாதையைக் கடக்கிறேன், பார்' என்றான். நான், 'அது போன பிறகு கடப்போம்; அவசரப்படாதே' என்றேன். அவன் கேட்கவில்லை.

'நீ பயங்கொள்ளி' என்று சொல்லிக்கொண்டே வரதன் பாதையின் குறுக்கே நடந்தான். அவன் மோட்டார் வருவதைப் பார்த்துக் கொண்டே நடந்த தால் மற்றொரு பக்கம் இருந்து வந்த சைக்கிலைக் கவ

னிக்கவில்லை. சைக்கில் ஓட்டியும் எதிரில் வந்த மோட்டாரைப் பார்த்துக்கொண்டே வந்து, வரதனை இடித்து விட்டான்.

வரதன் கீழே வீழ்ந்தான். சைக்கில் அவன்மீது விழுந்தது. இதற்குள் மோட்டார் வந்து அங்குத் திடீரென நிறுத்தப்பட்டது. நல்ல வேளை! வரதனுக்குப் பலமான காயங்கள் இல்லை. அங்குக் கூடியவர்கள், அவனைப் பார்த்து, 'வண்டி வரும்பொழுது பாதையைக் கடக்கலாமா?' என்று கோபித்தனர். வரதன் வெட்கத்தால் என்னைப் பார்த்தான். நான் அவனைத் தேற்றி வீடு சேர்த்தேன்.

---

12. நான் திருவிழாவில் தப்பிய விதம்

நான் நான்காம் வகுப்பு மாணவன். என் பெயர் அரங்கநாதன். நான் திருவொற்றியூர் மகிழடி சேவையைப் பார்க்க என் பெற்றோருடன் போனேன். அந்த ஊர் முழுவதும் மக்கள் நிறைந்து இருந்தார்கள். ஒவ்வொரு வீட்டுத் திண்ணைமீதும் மக்கள் படுத்திருந்தார்கள். கோவிலுக்குள் போக முடியவில்லை. போலீசார் இருந்தும் மக்களை ஒழுங்குபடுத்த முடியவில்லை.

சுவாமி ஊர்வலம் வந்தது. தெருவில் எள் இடவும் இடம் இல்லாமல் மக்கள் கூடி இருந்தார்கள். நாங்கள் அக்கூட்டத்திற்குள் நுழைந்தோம்; அரும்பாடு பட்டுச் சுவாமியின் அருகில் சென்றோம்; கண்குளாரத் தரிசித்து மீண்டோம்.

திரும்பி வருகையில், திடீரென்று ஒரு நெருக்கம் ஏற்பட்டது. நான் ஜன நெருக்கத்தில் அகப்பட்டுக் கொண்டேன். என் பெற்றோர் என்ன ஆயினர் என்பது எனக்குத் தெரியாது. நான் வாய்விட்டு அழத் தொடங்கினேன்.

அச்சமயத்தில் போலீஸ் சேவகர் ஒருவர் அங்கு வந்தார். அவரிடம் நான் கூட்டத்தில் அகப்பட்டுக் கொண்டதைச் சொன்னேன். அவர் என்னைக் கையைப்பற்றி அழைத்துச் சென்றார். நாங்கள் இருவரும் போலீஸ் நிலையத்தை அடைந்தோம்.

சிறிது நேரம் கழிந்தது. அங்கு என் பெற்றோர் வந்தனர். அவர்கள், நான் காணாமற் போனதைப் போலீசாருக்கு அறிவிக்க வந்தனராம். அவர்கள் என்னைக் கண்டதும் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார்கள்; என்னை அழைத்து வந்த சேவகர்க்கு நன்றி செலுத்தினர்.

Approved by the Text Book Committee, Madras
for class use vide Supplement to Part I-B of
Fort St. George Gazette
dated 27-4-48 Page 8.